Registered as a Newspaper

பக்கங்கள் - 16

விலை - ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 292

வெள்ளிக்கிழமை
13 செப்ரெம்பர் 2024

ஆவணி 28 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055


முச்சந்தி முரளி



"குதிரையின்ர குணமறிஞ்சுதான் கடவுள் கொம்பு குடுக்கேலை எண்டது உவர் நாமலுக்கு நல்லா பொருந்தும் பாருங்கோ"

# தமிழர்களுக்குத் தீர்வாக 13இனை தரவேமாட்டேன்!

## யாழில் வைத்து நாமல் அடம்பிடிப்பு

யாழ்ப்பாணம், செப். 13
ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்றால், 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்வேன் என்ற பொய் வாக்குறுதியை நான் வழங்கமாட்டேன். அவ்வாறு 13 ஆவது திருத்தத்தை முற்றாக நடைமுறைப்படுத்த என்னால் முடியாது என்று ஸ்ரீலங்கா ஜனாதிபதி வேட்பாளரான நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:- 15

# சஜித்துக்கு ஆதரவு: முடிவில் மாற்றமில்லை!

## தமிழரசுக் கட்சி அறிவிப்பு

வவுனியா, செப். 13
ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாஸவை ஆதரிப்பது என்ற தமது முடிவில் எந்த மாற்றமும் இல்லை என்று இலங்கைத் தமிழரசுக் கட்சி அறிவித்துள்ளது. 15

ஒக்ரோபர் மாதம் 7ஆம் திகதி

# ஸ்ரீலங்காவுக்கு கால அவகாசம்?

## ஜனாதிபதித் தேர்தலை வைத்து இறுதி முடிவு என்று தகவல்

**கொழும்பு, செப்ரெம்பர் 13**
**ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையால், இலங்கைக்கு மேலும் ஒரு வருடம் அல்லது இரண்டு வருடங்கள் கால அவகாசம் வழங்கப்பட வாய்ப்பிருப்பதாக எதிர்பார்க்கப்படுகின்றது. ஒக்ரோபர் மாதம் 7 ஆம் திகதி இது தொடர்பான இறுதி முடிவு எடுக்கப்படவுள்ளது.** 15

# போர்க்குற்றவாளிகளுக்கு பொருளாதாரத் தடைகள்?

## தெளிவான பதில் வழங்க பின்னடிக்கின்றது பிரிட்டன்

கொழும்பு, செப். 13
போர்க்குற்றங்களில் ஈடுபட்ட இலங்கையர்களுக்கு பொருளாதாரத் தடைகள் விதிக்கப்படுமா? என்ற கேள்விக்கு தீர்க்கமானதும் தெளிவானதுமான பதிலை வழங்க பிரிட்டன் மறுத்துள்ளது. 15

# மகள் கர்ப்பம் தந்தை கைது

யாழ்ப்பாணம், செப். 13
தனது மகளை பலமுறை பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தி கர்ப்பமாக்கிய தந்தை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.
யாழ்ப்பாணம் - சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. சுன்னாகம் பொலிஸாருக்கு வழங்கிய முறைப் 15

# தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை நிலைநாட்டுக

## குரலற்றவர்களின் குரல் வலியுறுத்து

யாழ்ப்பாணம், செப். 13
தேர்தல் பரப்புரைகளில் எண்ணற்ற வாக்குறுதிகளால் மேடைகளில் முழங்குகின்ற வேட்பாளர்கள், 30 ஆண்டுகளாகச் சிறைக்குள்ளேயே வாடிக்கொண்டிருக்கும், தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்கவேண்டும் 15

கனடாவிலிருந்து

# காணிவாங்க வந்தவரின் 85 லட்சம் ரூபா அபேஸ்!

யாழ்ப்பாணம், செப். 13
கனடாவில் இருந்து காணி வாங்குவதற்காக யாழ்ப்பாணம் வந்த புலம்பெயர் நபர் ஒருவரிடம் இருந்து 85 இலட்சம் ரூபா திருடப்பட்டுள்ளது. 15



குழுமோதல் காரணமாக

# ஜயவர்த்தன பல்கலை தற்காலிகமாக மூடல்!

கொழும்பு, செப். 13
இரு குழுக்களுக்கு இடையில் இடம்பெற்ற மோதலையடுத்து சிறி ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம் நேற்று மாலை 6 மணிமுதல் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. 15

ஜனாதிபதித் தேர்தல் 2024

# வாக்களிப்பது எப்படி? தெளிவூட்டத் திட்டம்!

யாழ்ப்பாணம், செப். 13
ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்கும் முறை தொடர்பில் மக்களுக்குத் தெளிவுபடுத்தும் கலந்துரையாடல் நேற்று வியாழக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் யாழ். மாவட்டச் செயலர் அலுவலகத்தில் மாவட்ட பதில் செயலர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நடைபெற்றது.
இதன்போது, எதிர்வரும் 21 ஆம் திகதி இடம் 15

தமிழரின் சுயாட்சியை வலியுறுத்தும்

# ஜனாதிபதி வேட்பாளர் போபகே யாழ். வருகை

யாழ்ப்பாணம், செப். 13
மக்கள் போராட்ட முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் சட்டத்தரணி நுவன் போபகே, பல்வேறு ஜனாதிபதித் தேர்தல் பரப்புரை நிகழ்வுகளில் கலந்துகொள்வதற்காக நாளை சனிக்கிழமை யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளார்.
நாளை காலை யாழ்.நகரில் துண்டுப் பிரசுர விநியோகத்தில் கலந்து கொள்ளும் அவர் முற்பகல் 10 மணியளவில் கொக்குவிலில் இடம்பெறும் ஊடக 15

# பொலிஸ் பொறுப்பதிகாரி மீது முறையிட்டவருக்கு வாள்வெட்டு!

யாழ்ப்பாணம், செப். 13
பொலிஸ் பொறுப்பதிகாரியின் அச்சுறுத்தலுக்குள்ளானவர் சில மணி நேரங்களில் வாள்வெட்டுக்கு இலக்கான சம்பவமொன்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றுள்ளது.
யாழ்ப்பாணம் - நெல்லியடிப் பகுதியில் குறித்த சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது. 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தமிழீழக் கனவை நனவாக்க அனுமதியேன்

நாமல் தெரிவிப்பு

கொழும்பு, செப்.13

வடக்கு, கிழக்கை இணைக்கவும் தமிழீழக் கனவு நனவாகவும் ஒருபோதும் இடமளியேன் என ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

அவிசாவளையில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரத்தின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

நாம் ஒற்றையாட்சியைப் பாதுகாப்போம். மாகாண சபைகளுக்குப் பொலிஸ், காணி அதிகாரங்களை வழங்கமாட்டோம்.

முதலீடு என்ற போர்வையில் தேசிய வளங்களை விற்பனை செய்யும் சூழ்ச்சி நடவடிக்கைக்கும் இடமளிக்கமாட்டோம் என்றும் அவர் தெரிவித்தார். (ச)

# நாட்டின் ஒருமைப்பாட்டுக்கு நாமலே சிறந்த தலைமை

கூறுகிறார் சரத் வீரசேகர

கொழும்பு, செப்.13

இராணுவத்தினரின் கௌரவம் மற்றும் உரிமைகளை பொதுஜன பெரமுனவினால் மாத்திரமே பாதுகாக்க முடியும். நாட்டின் ஒருமைப்பாட்டைப் பாதுகாக்க விரும்புபவர்கள் பொதுஜன பெரமுனவுக்கு வாக்களிக்கவேண்டும்.

-இவ்வாறு பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதாக ரணில், அநுர, சஜித் ஆகியோர் குறிப்பிடுகிறார்கள். 13க்கு ஒருபோதும் இடமில்லை என்று நாமல் ராஜபக்ச மாத்திரமே குறிப்பிடுகிறார். 30 வருட கால யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்த இராணுவத்தினரை நல்லாட்சி அரசாங்கமே சர்வதேசத்துக்கு காட்டிக் கொடுத்தது. இதற்கு ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாஸ மற்றும் அநுரகுமார ஆகியோர் முழுமையான ஒத்துழைப்பு வழங்கினார்கள்.

நாட்டின் ஒருமைப்பாட்டை பாதுகாப்பதற்காகவே இராணுவத்தினர் தமது உயிரை நாட்டுக்காக தியாகம் செய்தார்கள். நாட்டின் ஒருமைப்பாட்டைப் பாதுகாக்க விரும்புபவர்கள் பொதுஜன பெரமுனவுக்கு வாக்களிக்கவேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். (ச)

# மணியும் சிவப்பு நிறமும் மக்கள் மனதில் கறையே

திலும் அமுனுகம சுட்டிக்காட்டு



கொழும்பு, செப்.13

மக்கள் விடுதலை முன்னணி (ஜே . வி.பி. ) தனது முன்னைய முகத்தை மறைத்து இப்போது திசைகாட்டி என வேலைத்திட்டத்தைப் பின்பற்றி மக்களிடம் வலம் வருகின்றது. ஒவ்வொரு கிராமத்திலும் ஜே.வி.பி.யால் கொல்லப்பட்டவர்கள் குறைந்தது ஐந்து பேராவது இருப்பார்கள்.

-இவ்வாறு முதலீட்டு ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.

ரணில் விக்கிரமசிங்கவை ஆதரித்து கண்டியில் இடம்பெற்ற பிரசாரக் கூட்டத்தில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாடு ஆபத்தில் இருக்கும் போது ரணில் விக்கிரமசிங்க நாட்டைப் பொறுப்பேற்காமல் இருந்திருந்தால் இன்று பங்களாதேஷ் எதிர்கொண்டிருக்கும் கதியை எமது நாடும் சந்தித்திருக்கும்.

ஆனால் ஜே.வி.பி. எம்.பி.களால் முந்தையகாலத்தில் 70 வீடுகள் எரிக்கப்பட்டதுடன் துப்பாக்கியைத் தலையில் வைத்து அதிகாரத்தைக் கேட்டுள்ளனர். வாக்கு மூலம் ஆட்சியைப் பிடிக்காமல், பலவந்தமாக ஆட்சியைப் பிடிக்க முயன்றனர்.

ஒவ்வொரு கிராமத்திலும் ஜே .வி.பி. யால் கொல்லப்பட்டவர்கள் குறைந்தது ஐந்து பேராவது இருப்பார்கள் அப்படியிருந்த இவர்களுக்கு வாக்களிப்பீர்களா?

ஜே.வி.பி. தனது நிறத்தையும் அடையாளத்தையும் மாற்றிக் கொண்டு திசைகாட்டியில் இருந்து மறைந்தாலும் கிராமங்களில் உள்ள மக்களின் கண்ணீருக்கு பதிலளிக்க வேண்டும்- என்றார். (ச)

# கீதா பதவிக்கு சீதா

கொழும்பு, செப்.13

சுகாதார, மகளிர் மற்றும் சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சராக சீதா அரம்பேபொல நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இதேவேளை முன்னதாக பெண்கள் மற்றும் சிறுவர் இராஜாங்க அமைச்சராக கடமையாற்றி வந்த கீதா குமாரசிங்க, ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவுக்குதனது ஆதரவைவழங்கத்தீர்மானித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# அரசியல் மேடையில் குழுக்கள் மோதல்!

கொழும்பு, செப்.13

சாய்ந்தமருதில் 'இயலும் சிறீலங்கா' ஜனாதிபதி வேட்பாளர் ரணிலை ஆதரித்து நேற்றுமுன்தினம் புதுன்கிழமை இடம்பெற்ற கூட்டம் நிறைவு பெற்ற பின் இரு குழுக்களுக்கிடையில் மோதல் ஏற்பட்டுள்ளது.

இதனால் குறித்த வளாகத்தில் சில நிமிடங்கள் பதற்றம் ஏற்பட்ட நிலையில், சம்பவ இடத்துக்கு கலகமடக்கும் பொலிஸார் வரவழைக்கப்பட்டு நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. (ச)

# அமைச்சரவை முடிவுகள் ஆணைக்குழு அதிருப்தி



கொழும்பு, செப்.13

அமைச்சரவையால், அண்மையில் எடுக்கப்பட்ட முடிவுகள் குறித்து இலங்கை தேர்தல் ஆணையகம் கடும் அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளது.

அதில் சில முடிவுகள் ஒரு வேட்பாளரின் தெளிவான ஒப்புதல்களாகக் கருதப்படுவதாக ஆணையகம் குறிப்பிட்டுள்ளது.

அமைச்சரவையின் எந்தவொரு தீர்மானத்தையும் நிறுத்துவதற்கு ஆணையகத்துக்கு அதிகாரம் இல்லை. எனினும் சில முடிவுகளை ஒத்திவைக்க, ஆணையகம் பரிந்துரைத்துள்ளது.

எனினும் அண்மைய அமைச்சரவை அனுமதிகளை ஒரு வேட்பாளரை ஊக்குவிக்கும் செயல்களாகவே கருதுவதாக அமையும் என்றும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க குறிப்பிட்டுள்ளார். (ச)



# தொழிற்சந்தை ஆளுமைக்கேற்ப கல்விமுறைமை மறுசீரமைப்பு

சஜித் தெரிவிப்பு

கொழும்பு, செப்.13

அறிவை மையமாகக் கொண்ட பொருளாதாரத்துக்காக கல்வித்துறையில் விசேட மாற்றங்கள் அவசியமாகின்றன. அந்தவகையில் இலவசக் கல்வியை முழுமையாக பாதுகாப்பதோடு மாற்றுக் கல்விகளுக்கான வாய்ப்புகளையும் பலப்படுத்தவேண்டும்.

-இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் தொழில் ரீதியான போதனையாளர்களின் மாநாட்டில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வெளிநாட்டு முதலீட்டாளர்கள் எமது நாட்டுக்கு வருகின்றபோது பணியாளர் படையணியின் தேர்ச்சி, திறமை, ஆளுமை என்பவற்றைக் கருதிற் கொள்கின்றார்கள்.

இந்தியா தமது நாட்டின் இளைஞர்களுடைய ஆளுமையையும் தேர்ச்சியையும் திறமைகளையும் மேம்படுத்துவதற்காக தகவல் தொழில்நுட்பக் கல்வியை பலப்படுத்தியது. அறிவை மையமாகக் கொண்ட பொருளாதாரத்துக்காக கல்வித்துறையில் விசேட மாற்றங்கள் அவசியமாகின்றன. சர்வதேச தொழிற்சந்தைக்குத் தேவையான துறைகளுக்கு ஊழியர்களை வழங்குகின்ற விதத்தில் கல்வித்துறையில் மாற்றங்கள் கொண்டுவரப்பட வேண்டும் - என்றார். (ச-இ)

# அநுர மீது முறைப்பாடு

கொழும்பு, செப்.13

தேசிய மக்கள் சக்தி கட்சியின் தலைவரும் ஜனாதிபதி வேட்பாளருமான அநுர குமார திஸாநாயக்கவை கைதுசெய்யுமாறு குற்றப் புலனாய்வுத்திணைக்களத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அநுர குமார திஸாநாயக்க யாழ்ப்பாணத்தில் வெளியிட்ட கருத்துகளால் இன முரண்பாடுகள் ஏற்படும் அபாயம் உள்ளதாகத் தெரிவித்து தேசப்பற்றுள்ள மக்கள் சக்தியால் இந்த முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ச-சி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தனியார்துறை ஊதியம் இந்த மாதம் அதிகரிப்பு?

கொழும்பு, செப்.13

தனியார்துறை ஊழியர்களுக்கான குறைந்தபட்ச அடிப்படைச் சம்பளத்தை 21 ஆயிரம் ரூபாவாக மாற்றும் சட்டவரைவில் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன நேற்றுமுன்தினம் புதன்கிழமை கையொப்பமிட்டுள்ளார்.

இதன்பிரகாரம், தொழிலாளர்களின் எதிர்கால வைப்பு நிதி, ஊழியர் நம்பிக்கை நிதி மற்றும் பணிக்கொடைக்கான கொடுப்பனவுகளை வைப்பிலிடும்போது, இது குறைந்தபட்ச சம்பளமாக கருதப்படவேண்டும் என்று தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

நாட்டில் அண்மைக்காலமாக நிலவும் பொருளாதார நெருக்கடி மற்றும் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பினால் தனியார்துறை ஊழியர்களின் சம்பளம் 2021 ஆம் ஆண்டிலிருந்து அதிகரிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ச-25)





## மதத் தலைவர்களுடன் யாழில் நாமல் சந்திப்பு

கொழும்பு, செப்.13

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுனவின் சார்பில் போட்டியிடும் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தேர்தல் பிரசார நடவடிக்கைக்காக யாழ்ப்பாணத்துக்கு நேற்று வருகைதந்த நிலையில் நல்லை ஆதீனத்துக்குச் சென்று ஆசீர்வாதம் பெற்றார். நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீசோமசுந்தர பரமாச்சாரியார் சுவாமிகளை சந்தித்த நாமல் ராஜபக்ச, பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார். அத்துடன் யாழ்.மறை மாவட்ட ஆயர் ஜஸ்டின் ஞானப்பிரகாசம் ஆண்டகையையும் நாமல் சந்தித்துக் கலந்துரையாடினார். (ச-20)

## நீர் விநியோகத்துக்கென 100 மில்லியன் டொலர்

கொழும்பு, செப்.13

இலங்கையின் நீர் வழங்கல் மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்த 100 மில்லியன் அமெரிக்க டொலர் கடனுதவி வழங்க ஆசிய அபிவிருத்தி வங்கி அனுமதி வழங்கியுள்ளது.

இதன்மூலம் காலநிலை மாற்றத்தால் நீர்வளத்துக்கு ஏற்படும் பாதிப்பைக் குறைக்கலாம். 100 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி உதவியில் நீர் வழங்கல் மற்றும் சுகாதார மேம்பாட்டுத் திட்டம் இரண்டு துணைத் திட்டங்களைக் கொண்டுள்ளது. முதலாவது திட்டம் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபைக்கு தேசிய கொள்கைகள் மற்றும் உத்திகளை நிறுவும். இரண்டாவது திட்டம் மேம்படுத்தல் நடவடிக்கைகள் மற்றும் வழிகாட்டுதல்களை செயற்படுத்துவதை ஆதரிக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச)

## வாக்காளர் அட்டையின்றி வாக்களிப்பதற்கு ஏற்பாடு

கொழும்பு, செப்.13

வெளிநாடுகளிலிருந்து நாடு திரும்புவோர் வாக்காளர் அடையாள அட்டை இன்றியும் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்கமுடியும் எனச் சுதந்திரம் மற்றும் நியாயமான தேர்தலுக்கான மக்கள் செயற்பாட்டு இயக்கமான பவ்ரல் அறிவித்துள்ளது.

வாக்களிப்பு இடம்பெறும் தினத்தன்று நாடு திரும்பும் வாக்காளர்களும் தேர்தலில் வாக்களிக்கமுடியும்.

தமது கடவுச்சீட்டை வாக்களிப்பு நிலையங்களில் காண்பித்து, குறித்த தினத்தில் நாடு திரும்பியதை உறுதிப்படுத்தமுடியும் என்பதுடன், வாக்காளர் பட்டியலில் தங்களது பெயர் இருப்பின் எவ்வித தடையுமின்றி வாக்களிக்கமுடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## வவுனியா சிறையில் 17 கைதிகள் விடுதலை!

தேசிய சிறைக்கைதிகள் தினத்தை முன்னிட்டு இன்று நாடளாவிய ரீதியில் 359 சிறைக் கைதிகள் ஜனாதிபதியின் விசேட பொது மன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். அதற்கமைய வவுனியா சிறைச்சாலையில் இருந்து 17 கைதிகள் சிறிய குற்றங்கள் மற்றும் சிறிய அபராதத் தொகையைச் செலுத்தத் தவறிய சிறைக்கைதிகளே இவ்வாறு பொது மன்னிப்பின் கீழ் விடுவிக்கப்பட்டுள்ளனர். (ச-110)

## தேர்தல் கண்காணிப்புக்குழு மன்னாரில் கலந்துரையாடல்

மன்னார், செப் . 13



ஐரோப்பிய ஒன்றியத்தின் தேர்தல் கண்காணிப்பு குழுவினர் நேற்றுமுன்தினம் புதன்கிழமை மன்னாருக்குப் பயணம் மேற்கொண்டனர். இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ்நிர்மலநாதனை அவருடைய மன்னார் அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர். ஜனாதிபதித் தேர்தல் மற்றும் தற்போதைய சூழ்நிலைகள் தொடர்பாகவும் நாடாளுமன்ற உறுப்பினரிடம் கேட்டறிந்தனர். இதில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மன்னார் மாவட்ட செயலாளர் ஜஸ்ரின் துரமும் கலந்துகொண்டார். (ச-22,56)

## தினம் தெரியுமோ?

'வாம்மா மின்னல்' எண்ட மாதிரி நாமல் நேற்றைக்கு யாழ்ப்பாணத்தை ரவுண்டடிச்சுக்கொண்டு போயிருக்கிறார். ஆள் இந்தமுறை எலக்சனில நிக்கிறது வெல்லுறதுக்கில்லை எண்டது எல்லாருக்குமே வடிவாத்தெரியும். கட்சியின்ர வாக்குவங்கி வேற பக்கம் சாயக்கூடாது எண்டபயத்தில தான் மொட்டுக் கட்சி ரணிலோட முட்டிமோதிக்கொண்டு தனி வேட்பாளரை இறக்கவெளிக்கிட்டது. என்னதான் உலகமே பிரண்டாலும் மொட்டு வேட்பாளர் வெல்லமாட்டார் எண்டது மொட்டுக்கட்சியில உள்ள எல்லாருக்குமே நல்லாத் தெரியும். அதால மொட்டில இருந்த 92 எம்.பி.க்களும் மஹிந்தவில வைச்சிருந்த விசுவாசத்தை தூக்கி குப்பையில போட்டிட்டு காஸ் சிலிண்டருக்குப் பின்னால ஓடினவை. அதைவிட பெரிய இடி என்னெண்டால், ஆரை வேட்பாளராக இறக்கலாம் எண்டு மொட்டுக்கட்சி கனவு கண்டிச்சுதோ , அந்த தம்மிக்க பெரேரா கடைசியில காலைவாரினதுதான். இலங்கையின்ர பெரும் பணக்காரரான தம்மிக்க , தங்கட கட்சி வேட்பாளராக களமிறங்கினால் அஞ்சு சதம் கூட கட்சி செலவழிக்க வேண்டியதில்லை. எல்லாத்தையும் தம்மிக்கவே பார்த்திருப்பார். ஓசிக் காசில வாக்கு வங்கியை மொட்டு தக்க வைச்சிருக்கலாம். ஆனால் அந்தாள் கைவிட்டதால வேற வழியில்லாமல் நாமல் கழுத்தைக் குடுக்க வேண்டியதாப் போட்டுது.

என்னதான் வாழ்ந்துகெட்ட கட்சியா இருந்தாலும், சனத்திட்ட மொட்டுக் கட்சியில எந்தப் பரிதாபமும் இல்லை. ஆற்றை கூட்டத்துக்கு குறைவா சனம் வருகுதெண்டு பொன்சேகாவோட , போட்டி போடுற மாதிரித்தான் நாமலின்ர நிலைமை இருக்குது. சரி, சிங்கள ஏரியாப்பக்கம் தான் நிலைமை இப்பிடியெண்டால், வடக்கு, கிழக்கில அவையின்ர நிலைமை இன்னும் மோசம். ஆரெல்லாம் முந்தி இவைக்கு முட்டுக்குடுத்தினமோ அவையெல்லாம் இப்ப ரெலிபோனுக்கு பின்னாலையும், காஸ் சிலிண்டருக்குப் பின்னாலையும் போட்டினம். இந்த நிலைமையில யாழ்ப்பாணத்தில மொட்டுக்கட்சிக்கு நோட்டீஸ் ஒட்டவே ஆக்கள் இல்லையாம். இஞ்ச பொறுப்பா இருக்கிறவருக்கு மணல் கணக்குத்தான் போடத் தெரியுமே தவிர சனத்தின்ர மனக்கணக்கு தெரியவே தெரியாது. எண்டாலும் நாமல் நேற்று யாழ்ப்பாணம் வரேக்க, ஒருமாதிரி வீரசிங்கம் மண்டபத்துக்க கொஞ்ச சனத்தை கொண்டந்து சேர்த்துப் போட்டினமாம்.


நேற்று வீரசிங்கம் மண்டபத்துக்கு போனவைக்கு நல்ல கவனிப்பாம். கையில காசு, வாயில போத்தல் எண்டு இறைச்சுத்தான் ஆக்களை கொண்டந்து கூட்டத்தை ஒப்பேற்றினவையாம். சனத்தைப் பார்த்தவுடனேயே நாமல் 'இதுகளெல்லாம் எங்களுக்கு கடைசிமட்டும் வாக்குப் போடாதுகள்' எண்டு பக்கத்தில இருந்தவரிட்ட கொஞ்சம் சத்தமா சொல்லியிருக்கிறார். அதோட இன்னும் அவமானப்படக்கூடாது எண்டு அந்தக் கூட்டத்தில அஞ்சு நிமிசம் மட்டும் தலையைக் காட்டிப்போட்டு, 'நேரமும் பிளைட் காசும் அநியாயம்' எண்டு புறுபுறுத்தபடி சில சந்திப்புகளை கான்சல் செய்துபோட்டு கொழும்புக்குப் பறந்திட்டாராம். முந்தி நாமல் வந்தால் அமைச்சர்கள், அம்புகள் எண்டு ஆளணி குவிஞ்ச காலம் மலையேறி, இப்பிடி ஆளே இல்லாத கூட்டத்தில நாமல் ரீ ஆத்துற காலம் வருமெண்டு ஆரும் கனவுகூடக் காணேலை. காலமும் கண்ணீரும் பொல்லாததுகள் கண்டியளோ. நாமலுக்கு விளங்கினாச் சரி.

- பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி ஆரம்பப் பிரிவு மாணவர்களின் கல்விக் கண்காட்சி அண்மையில் கல்லூரி அதிபர் திருமதி ஸ்ரீரதி முருகஜோதி தலைமையில் இடம்பெற்றது. கண்காட்சிக் கூடத்தை முன்மை விருந்தினராகக் கலந்துகொண்ட கல்வி வலய முறைசாரா கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் த.சிவகுமார் திறந்து வைத்தார். (ச-17)

# ‘அஸ்வெசும’ கொடுப்பனவு

யாழ்ப்பாணம், செப்.13
பச்சிலைப்பள்ளிப் பிரதேச ‘அஸ்வெசும’ நலன்புரித் திட்டப் பயனாளிகளுக்கான ஓகஸ்ட் மாதக்கொடுப்பனவுகள் கடந்த செவ்வாய்க்கிழமை தொடக்கம் வங்கிகளில் விநியோகிக்கப்பட்டு வருகின்றன. (ச-25, 9)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். குடும்பத்தில் உறவினர்களால் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும். பொறுமையைக் கடைப்பிடிக்கவும். மகிழ்ச்சி உண்டாகும். கருத்துவேறுபாடு ஏற்பட்டு நீங்கும். அனுகூலம் உண்டாகும்.

**இடபம்:** வாழ்க்கைத்துணை வழியில் செலவுகள் ஏற்படும். போதுமான பணம் இருப்பதால் சமாளித்து விடுவீர்கள். மற்றவர்களுடன் மனஸ்தாபம் ஏற்படக்கூடும். கவனம் தேவை. வீண் செலவுகள் ஏற்படும்.

**மிதுனம்:** மனதில் இனம் தெரியாத குழப்பங்கள் ஏற்பட்டு விலகும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். உறவினர்களால் ஓரளவு அனுகூலம் ஏற்படும். வியாபாரத்தில் விற்பனையும் இலாபமும் மந்தமாகத்தான் இருக்கும்.

**கடகம்:** பிள்ளைகளால் பிரச்சினை ஏற்படக்கூடும். நண்பர்களால் ஆதாயம் கிடைக்கும். காரியங்கள் அனுகூலமாக முடியும். உடல் ஆரோக்கியம் மேம்படும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. விற்பனையும் இலாபமும் உயரும்.

**சிம்மம்:** உற்சாகமான நாள். தாய்வழி உறவுகளால் செலவுகள் ஏற்படக்கூடும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. வியாபாரத்தில் விற்பனை வழக்கம்போலவே காணப்படும். வழிபாடு நலம் சேர்க்கும்.

**கன்னி:** நீங்கள் தொடங்கும் புதிய முயற்சி சாதகமாக முடியும். தந்தைவழி உறவினர்களால் ஆதாயம் உண்டாகும். பிள்ளைகளுக்காக செலவு செய்ய நேரிடும். வியாபாரத்தில் எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும்.

**துலாம்:** மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். முடிவுகளை இன்று எடுக்கலாம். செலவுகள் ஏற்படும். தாயாரின் உடல்நலனில் கவனம் தேவை. வியாபாரத்தில் சற்றுக் கூடுதலாக உழைக்க வேண்டியிருக்கும்.

**விருச்சிகம் :** எதிர்பாராத பணவரவுடன், திடீர்ச் செலவுகளும் ஏற்படும். குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். நண்பர்கள் கேட்கும் உதவியை மகிழ்ச்சியுடன் செய்து தருவீர்கள். மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும்.

**தனுசு:** உற்சாகமாகக் காணப்படுவீர்கள். எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. ஆனாலும், புதிய முயற்சிகளில் ஈடுபட வேண்டாம். வாழ்க்கைத்துணையால் ஆதாயம் உண்டாகும்.

**மகரம்:** தேவையான பணம் கையில் இருந்தாலும், தேவையற்ற செலவுகளும் ஏற்படக்கூடும். உங்கள் முயற்சிகளுக்கு வாழ்க்கைத்துணை ஆதரவாக இருப்பார். வியாபாரத்தில் விற்பனை எதிர்பார்த்தபடி சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும்.

**கும்பம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் திடீர்ச் செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு. பிள்ளைகளின் பிடிவாதப் போக்கு மாறி, உங்கள் அறிவுரைப்படி செயற்படுவார்கள்.

**மீனம்:** எடுத்த காரியங்களில் வெற்றி உண்டாகும். மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். நண்பர்களின் சந்திப்பு மகிழ்ச்சி தரும். வியாபாரத்தில் விற்பனையும் இலாபமும் ஏற்படும். முயற்சி இழுபறியாகும்.

# நிர்ணய விலையில் முட்டை இல்லை

## நுகர்வோர் ஆதங்கம்

யாழ்ப்பாணம், செப்.13
யாழ்ப்பாணத்தில் முட்டையின் விலை இடத்துக்கு இடம் மாறுபட்ட விலையில் விற்கப்படுவதாக நுகர்வோர் விசனம் தெரிவித்துள்ளனர்.
அரசாங்கத்தால் முட்டையின் விலை 30 ரூபாவாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.
எனினும் யாழ்ப்பாணத்தின் பல்வேறு இடங்களிலும் ஓரிடத்தில் 40 ரூபாவாகவும் சில இடங்களில் 45 ரூபா முதல் 50 ரூபா வரையிலும் முட்டையொன்று விற்பனை செய்யப்படுகிறது.
எனவே உரிய அதிகாரிகள் நிர்ணய விலையில் முட்டைகள் விற்பனை செய்யப்படுவதை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் தெரிவித்தனர். (ச-17)

# நாவாந்துறை நல்லூரில் டெங்கு



யாழ்ப்பாணம், செப்.13
நாவாந்துறை, நல்லூர் ஆகிய இடங்களில் டெங்கின் தாக்கம் காணப்படுவதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.
இந்தப் பகுதியில் டெங்கு பரவும் சூழலைக் கண்டறிந்து உரிமையாளர்களுக்கெதிரான சுகாதாரப் பரிசோதகர்களால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் டெங்கால் பாதிக்கப்பட்ட மக்களின் குடியிருப்புகளைச் சுற்றி புகை அடிக்கும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ச-17)



நீர்வேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் நடத்திய பணியாளர் கௌரவிப்பு நிகழ்வு கடந்த புதன்கிழமை சங்கத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. நிகழ்வில் வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் என்.திருலிங்கநாதன் முதன்மை விருந்தினராகவும், கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கே.சந்திரசேகரன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டனர். (ரி-17)

# தேங்காய் திருடர்கள் கைவரிசை

யாழ்ப்பாணம், செப்.13
சந்தைகளில் தேங்காயின் விலை உச்சம் பெற்றுள்ள நிலையில் தென்னைகளிலிருந்து தேங்காய்களை களவாடிச் செல்லும் சம்பவங்கள் அதிகரித்துள்ளதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.
கொழும்புத்துறையிலுள்ள வெற்றுக் காணிகள் மற்றும் ஆள்களற்ற குடியிருப்புகளிலுள்ள தென்னைகளில் பகல் வேளைகளிலும் திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டி வருகின்றனர் என்றும் மக்கள் தெரிவித்துள்ளனர். இதேவேளை தேங்காய் ஒன்று 140 ரூபா வரையில் விற்பனை செய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-17)

# சார்க் திரைப்படத் தின நிகழ்வு



சார்க் திரைப்படத் தின நிகழ்வு சார்க் கலாசார நிலையத்தின் ஏற்பாட்டில் யாழ். மத்திய கலாசார நிலையத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர், வடக்கு மாகாண பிரதம செயலாளர், இந்தியத் துணைத் தூதரக அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டனர். (ரி-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# ஒரு தேர்தலும் சிதறிய கட்சியும்

இலங்கை ஜனாதிபதித் தேர்தலில் 1999ஆம் ஆண்டே தமிழ் மக்கள் ஜனாதிபதியாக யாரைத் தெரிவு செய்யவேண்டும் என்பதற்காக இறுதியாக வாக்களித்திருந்தார்கள். அதன் பின்னர் 2005ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகளின் கோரிக்கையை ஏற்று தேர்தலைப் புறக்கணித்திருந்தார்கள். 2010, 2015, 2019ஆம் ஆண்டுகளில் ராஜபக்சக்கள் ஆட்சிக்கு வரக்கூடாது என்பதற்காக, அவர்களுக்கு எதிராக வாக்களித்திருந்தார்கள். மாறாக தமிழ் மக்கள் சரத் பொன்சேகாவுக்கோ, மைத்திரி பாலவுக்கோ, சஜித் பிரேமதாஸவுக்கோ ஆதரவாக இதனை அர்த்தம் கொள்வது அபத்தத்திலும் அபத்தம். 25 ஆண்டுகளின் பின்னர் இப்போதுதான் யார் ஜனாதிபதியாக வரவேண்டும் என தமிழ்மக்கள் வாக்களிக்க வேண்டியிருக்கின்றது. அதுவும் தமிழீழ விடுதலைப் புலிகளின் பலம் இல்லாத காலத்தில் இப்படியான இக்கட்டானமுடிவொன்றை எடுக்கவேண்டியிருக்கின்றது.

ஜனாதிபதித் தேர்தல் களமும் முன்னெப்போதும் இல்லாத வகையில் மும்முனைப் போட்டிக் களமாகியிருக்கின்றது. இதுவும் குழப்பங்களை அதிகரித்திருக்கின்றது. போரின் பின்னரான 3 ஜனாதிபதித் தேர்தல்களிலும், ராஜபக்சக்கள் எதிர் மனநிலை என்ற எண்ண வோட்டத்தில் தமிழ் மக்கள் இருந்தமையால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் இலகுவாக முடிவு எடுக்கக் கூடியதாக இருந்தது. இம்முறை நிலைமை அவ்வாறில்லை. தமிழ் மக்கள் தெற்கின் மூன்று பிரதான வேட்பாளர்களையும் ஆதரிக்கின்றனர். அதற்கு அப்பால் தமிழ்ப் பொதுவேட்பாளரையும் ஆதரிக்கின்றனர். அதேவேளை முன்னைய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்த கட்சிகள் பல இணைந்து ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியை உருவாக்கி அந்தக் கூட்டணி தமிழ்ப் பொதுவேட்பாளரை ஆதரிப்பதாக அறிவித்துவிட்டது. ஆனால் தற்போதைய நிலையில் தமிழ் மக்களின் பிரதான அரசியல் கட்சியான இலங்கைத் தமிழரசுக் கட்சி முடிவை எடுக்க முடியாமல் திணறியது. பின்னர் தனது கட்சியின் முடிவு என ஜனாதிபதி வேட்பாளர் சஜித்தை ஆதரிப்பதாக அறிவித்தது. ஆனால், அந்தக் கட்சியின் பிரதான தலைவர்கள் ஒவ்வொருவரும் நவக்கிரகங்கள் போன்று ஒவ்வொரு திசையில் நிற்கின்றனர். கட்சியின் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், தமிழ்ப் பொதுவேட்பாளரை ஆதரிக்கிறார். கட்சியின் தலைவராக 10 ஆண்டுகளாக பதவியிலிருக்கும் மாவை.சோ.சேனாதிராசா, ஜனாதிபதி ரணிலே அடுத்த தேர்தலில் வெற்றி பெறுவார் என்கிறார். இலங்கைத் தமிழரசுக் கட்சி என்ற பெருவிருட்சத்தை அதன் இப்போதைய தலைவர்கள் என்று சொல்லிக்கொள்வோர் அடியோடு சரித்துவிட்டனர். தமிழ் மக்களின் உரிமைக்காக போராடப்புறப்பட்ட அந்தக் கட்சி இன்று அடையாளம் தெரியாமல் உருக்குலைந்து போய்க் கொண்டிருக்கின்றது.

தெற்கில் எப்படி பாரம்பரிய அரசியல் கட்சிகளான சிறிலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி என்பன காணாமல் போய்க்கொண்டிருக்கின்றனவோ அதைப்போல, வடக்கு - கிழக்கின் மரபார்ந்த அரசியல் கட்சியான இலங்கைத் தமிழரசுக் கட்சியும் காணாமல் போய்க்கொண்டிருக்கின்றது. தமிழ் மக்களுக்காக சுயநலம் துறந்து சிந்திக்கத் தவறியதன் விளைவை அந்தக் கட்சி அனுபவிக்கத் தொடங்கியிருக்கின்றது. ஒவ்வொருவரும் தங்கள் நலன்கள் மற்றும் சுகபோகங்களுக்காக ஒவ்வொரு ஜனாதிபதி வேட்பாளரை ஆதரிக்கும் முடிவுகளை எடுத்திருக்கின்றார்கள் என்பதை விளங்கிக்கொள்ள முடியாதளவுக்கு தமிழ் மக்கள் ஒன்றும் முட்டாள்கள் இல்லை. நிச்சயமாக எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ் மக்களின் தண்டனையை இலங்கைத் தமிழரசுக் கட்சி எதிர்கொண்டேயாகவேண்டியிருக்கும்.





# வாக்காளர் அட்டைகள் 10 மில்லியன் விநியோகம்

**கொழும்பு, செப்.13**

**தபால் திணைக்களத்தினூடாக இதுவரையில் 10 மில்லியனுக்கும் அதிக வாக்காளர் அட்டைகள் விநியோகம் செய்யப்பட்டுள்ளதாக சிரேஷ்ட பிரதி தபால்மா அதிபர் ராஜித ரணசிங்க தெரிவித்துள்ளார்.**

மீதமுள்ள வாக்காளர் அட்டைகள் அடுத்த சில நாள்களில் வாக்காளர்களுக்கு விநியோகிக்கப்படும் வாக்காளர் அட்டை விநியோகத்தை எதிர்வரும் 14 ஆம் திகதிக்குள் பூர்த்தி செய்ய எதிர்பார்க்கப்படுகிறது. எதிர்வரும் 14ஆம் திகதிக்குள் வாக்காளர் அட்டைகள் கிடைக்காதவர்கள், அடையாள அட்டையுடன் சம்பந்தப்பட்ட தபால் நிலையத்துக்குச் சென்று அடையாளத்தை உறுதிப்படுத்தி தங்களது வாக்காளர் அட்டைகளைப் பெற்றுக் கொள்ளலாம் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச)

# இணையவழி ஆட்சேர்ப்பு ரூ.10 மில்லியன் இலாபம்



கொழும்பு, செப்.13

கல்லூரி மாணவர்களை இணையவழியில் ஆட்சேர்ப்புச் செய்ததன் மூலம் அரசாங்கத்துக்கு சுமார் 10 மில்லியன் ரூபா சேமிக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார். கல்லூரி மாணவர்களை இணைத்துக் கொள்வதற்காக முன்னர் 13.5 மில்லியன் ரூபா செலவிடப்பட்டது. இம்முறை அது 3.5 மில்லியன் ரூபாவாக உள்ளது.

இதனால் அரசாங்கத்துக்கு 10 மில்லியன் ரூபாவை சேமிக்க முடிந்துள்ளது. பயிலுநர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு ஒன்றரை வருடங்கள் முதல் இரண்டு வருடங்கள் எடுத்த நிலையில் இம்முறை 4 மாதங்களில் மிகக்குறுகிய காலப்பகுதியில் ஆட்சேர்ப்பை வினைத்திறனாக மேற்கொள்ளமுடியும் எனவும் அமைச்சர் தெரிவித்தார். (ச)

# பிணையில் கெஹலிய

கொழும்பு, செப்.13

முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல உட்பட 3 பேர் பிணையில் செல்ல மாளிகாகந்த நீதிவான் நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது. தரமற்ற இம்யூனோகுளோபுலின் ஊசி மருந்துகளைக் கொள்வனவு செய்தமை தொடர்பில் மேற்படி சந்தேகநபர்கள் கடந்த பெப்ரவரி 2ஆம் திகதி கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர். சந்தேகநபர்கள் நேற்றுமுன்தினம் மாளிகாகந்த நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (ச)

# தேர்தலில் வாக்களிக்க தற்காலிக அ.அட்டை

யாழ்ப்பாணம், செப்.13

தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பித்தவர்களுக்கு ஆட்பதிவுத் திணைக்களத்தால் ஜனாதிபதி தேர்தலில் வாக்களிப்பதற்கு வசதியாக விண்ணப்பதாரர்களுக்கு தற்காலிக அடையாள அட்டை விநியோகிக்கப்படுகிறது. கிராம அலுவலர் மற்றும் பிரதேச செயலர் ஆகியோரின் கையொப்பமிட்டுப்பெற்று வாக்களிக்கும்போது பயன்படுத்த முடியுமென ஆட்பதிவுத் திணைக்களம் அறிவித்துள்ளது. (ரி-9)

# யாழ்.சிறையில் 19 கைதிகள் விடுதலை

யாழ்ப்பாணம், செப்.13

சிறைக்கைதிகள் தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் இருந்து 19 கைதிகள் நேற்று விடுதலை செய்யப்பட்டுள்ளனர். யாழ்ப்பாணம் சிறைச்சாலை அத்தியட்சகர் சீனிவாசகம் இந்திரகுமார் தலைமையில் இந்தக் கைதிகள் விடுவிக்கும் நிகழ்வு இடம்பெற்றது. (ச- 23)

## நாளை

14.09.2024

சனிக்கிழமை - ஆவணி - 29

சுபநேரம் : 03.03 - 04.33

ராகுகாலம் : 09.03 - 10.33

## நாளொரு நல்வார்த்தை

**மனித சுதந்திரத்தைப் பறித்து தன்னடக்கத்தையும் ஊக்கத்தையும் உண்டாக்க முடியாது.**

- ஆபிரகாம் லிங்கன் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மென்பந்து சுற்றுப்போட்டியில் சுழிபுரம் சாடோவ் சம்பியன்!



யாழ்ப்பாணம், செப். 13

சுழிபுரம் தீரன் விளையாட்டுக் கழகத் தலைவர் சதாசிவம் வசந்தன் தலைமையில் மென்பந்து சுற்றுப்போட்டி திருவடிநிலை இந்து தமிழ்க்கலவன் பாடசாலை மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணியளவில் நடைபெற்றது.

இறுதிப் போட்டியில் சுழிபுரம் சாடோவ் அணி வெற்றி பெற்றது. வெற்றிபெற்ற அணிக்கு வெற்றிக்கிண்ணமும், பரிசில்களும் வழங்கப்பட்டன. நிகழ்வில் பிரதம விருந்தினராக நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும், உதயன் குழுமத் தலைவருமான ஈஸ்வரபாதம் சரவணபவன் கலந்து கொண்டார். (எ-22)








## கௌரவிப்பு நிகழ்வு

வவுனியா, செப்.13

புளியங்குளம் சன்னாசி பரந்தன் ஆதி விநாயகர் ஆலயத் திருவிழா இறுதி நிகழ்வில் சன்னாசி பரந்தன் கிராமத்தில் இருந்து பல்கலைக்கழகம், கல்வியியற்கல்லூரிக்குத் தெரிவான மாணவர்கள், புலமைப் பரிசில் பரீட்சையில் சிறந்த பெறுபேறு எடுத்தவர்கள், விளையாட்டில் மாகாண மட்டத்தில் சாதனை படைத்த மாணவர்கள் மற்றும் கலைஞர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

ரி.கே.வேணி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக மருத்துவக் கலாநிதி வவுனியா பல்கலைக்கழக மருத்துவர் ப.சத்தியலிங்கம், சிறப்பு விருந்தினர்களாக நெடுங்கேணி தெற்கு கிராமசேவையாளர் மா.சுரேந்தர், மதியாமடு விவேகானந்த வித்தியாலய ஓய்வு நிலை அதிபர் சி.சிவராஜா,நெடுங்கேணி மகா வித்தியாலய அதிபர் கு.விமலேந்திரன், வவுனியா கொந்தக்காரன்குளம்அ.த.க.பாடசாலை அதிபர் ந.நவரட்ணம், விருந்தினர்களாக வவுனியா வடக்கு முன்பள்ளி ஓய்வுநிலை உதவிக்கல்விப்பணிப்பாளர் சபாரத்தினம் இராஜேஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டனர். (எ-ரி-19)





வரலாற்றுப் பிரசித்திபெற்ற யாழ்.தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலயக் குரோதி வருட மஹோற்சவப் பெருந்திருவிழாவின் ஐந்தாம் நாள் திருவிழாவான தங்கரத உற்சவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. மின்விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட தங்கரதத்தில் துர்க்கை அம்பாள் அடியவர்கள் புடைசூழ எழிலுறப் பவனி வந்தார். (எ-45-66)

மன்னார், தள்ளாடி 54ஆவது படைப் பிரிவின் 14ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு மக்களிடையே நல்லிணக்கத்தை மேம்படுத்தும் நோக்கில் முப்படையினர் இணைந்து ஏற்பாடு செய்த நிகழ்வுகளின் இறுதி நிகழ்வுகள் கடந்த சனிக்கிழமை மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது. (எ-22,56)



வரலாற்றுப் பிரசித்திபெற்ற இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் ஆலய விநாயகர் சதுர்த்தி உற்சவம் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. பஞ்சமுக அர்ச்சனை, வசந்தமண்டபப் பூசையைத் தொடர்ந்து இரவு விநாயகப் பெருமான் சித்திரத் தேரில் பவனி வரும் திருக்காட்சி நடைபெற்றது. (எ-45-66)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையக மக்களின் உரிமைக்கு நாம் குரல் கொடுப்போம்!

## விக்கினேஸ்வரன் தெரிவிப்பு


**யாழ்ப்பாணம், செப்.13**

**தமிழ்ப் பொதுவேட்பாளர் அரியநேந்திரன் நாடாளுமன்றத்தில் மலையக மக்களுக்காக முன்னர் குரல் கொடுத்தவராவார். அவர் மலையக மக்களை சகோதர சகோதரிகளாகவே நேசிக்கின்றார். மலையக மக்களும் கிழக்கிலங்கை முஸ்லிம் மக்களும் அவருக்கு ஆதரவாக ஜனாதிபதித்தேர்தலில் வாக்களிப்பதை அவர் மிகுந்த மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்வார்.**

-இவ்வாறு தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்கினேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்களை ஒன்றிணைப்பதற்காக இம்முறை ஜனாதிபதித்தேர்தலில் தமிழ்ப் பொதுவேட்பாளரைக் களமிறக்கியிருப்பதாகக் கூறுகிறீர்கள். அவ்வாறெனில் தமிழ்பேசும் மலையகத் தமிழர்களும், கிழக்கு மாகாண முஸ்லிம் மக்களும் தமிழர்கள் இல்லையா? அவர்களை ஏன் உங்களது தமிழ்ப் பொதுவேட்பாளருக்கு வாக்களிக்குமாறு கோரவில்லை? என எழுப்பப்பட்டிருக்கும் கேள்விக்குப் பதிலளிக்கையில் அவர் இதனைத் தெரிவித்தார். வடக்கு - கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த தமிழ் மக்களிடையே இன்று ஒரு மறுமலர்ச்சி பரிணமித்திருக்கின்றது. உலக அரங்குகளில் எமது குரல் ஓங்கி ஒலிக்க நாம் ஒரு பலமான மக்கள் கூட்டம் என்ற உண்மையை நிலைநிறுத்துவது அவசியம். இவ்வாறான ஒரு தமிழ்மொழி சார்ந்த ஈடுபாடு மலையகத்திலும், கிழக்கு முஸ்லிம்கள் மத்தியிலும் ஏற்பட்டிருப்பது வரவேற்கத்தக்கதே.

தமிழ் பேசும் மக்கள் என்ற அடிப்படையில் ஒன்றுசேர விரும்புவது மிகுந்த மகிழ்ச்சியை ஊட்டுகின்றது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ச-26)



# நிரந்தர வீடுகளில் குடும்பங்கள் இல்லை

முல்லைத்தீவு, செப்.13

முல்லைத்தீவில் அமைக்கப்பட்ட பல நிரந்தர வீடுகளில் குடும்பங்கள் வசிக்காதது தொடர்பாக முல்லைத்தீவு மாவட்டச் செயலகம் இறுக்கமான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என பொது அமைப்புகள் வலியுறுத்தியுள்ளன. 2009 ஆம் ஆண்டின் பின்னர் மீள்குடியேற்றத்தின் போது நிரந்தர வீடுகள் வழங்கப்பட்டன. பல்வேறு காரணங்களை கூறி நிரந்தர வீடுகளை பெற்றுக் கொண்டவர்கள் வீடுகளில் வசிக்காததன் காரணமாக வீட்டின் சூழல் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக கிராம அலுவலர் ஊடாக பிரதேச செயலாளர்களுக்கு பொது அமைப்புகள் கருத்துகளை வழங்கிய போதும் நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என கோரிக்கை விடுத்தனர். (ரி-13)

## மஹோற்சவம்

யாழ்ப்பாணம், செப்.13

இருபாலை கிழக்கு கேணிக்குளம்பதி அருள்மிகு லிங்க விநாயகர் தேவஸ்தான வருடாந்த பெருந்திருவிழா நாளை மறுதினம் 15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப 10மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து 15நாள்கள் நடைபெறும் உற்சவங்களில் 28ஆம் திகதி சனிக்கிழமை தேர்த்திருவிழாவும், 29ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறுமென ஆலய தர்மகர்த்தா தெரிவித்தார். (ரி)

# வர்த்தக விசா சிக்கல் தீர்க்குமாறு கோரிக்கை!

கொழும்பு, செப்.13

வர்த்தக விசாவில் இலங்கைக்கு வருகை தருவோர் எதிர்நோக்கும் சிக்கல்களைத் தீர்ப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு ஆடைக்கைத் தொழில் உற்பத்தியாளர்களின் அமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளன.

தற்போது சுற்றுலாப் பயணிகளுக்கு வருகை விசா வழங்கப்படுகிறது. ஆனால் வர்த்தக விசாவில் இலங்கைக்கு வருபவர்களுக்கு எதுவித திட்டமும் இல்லை. வர்த்தக நோக்கத்துடன் வருவோர் சுற்றுலா விசாவில் வரமுடியாது. கொள்வனவு நோக்கத்துடன் வருவோர், இயந்திரங்களை விற்பனை செய்வோர், உற்பத்தியாளர்கள்,தொழில்நுட்ப சேவைகளை வழங்குவோர் என பல்வேறு தரப்பினரும் வர்த்தக விசாவில் வருகை தருவார்கள். அவர்கள் தம்முடன் ஆவணங்கள்,மாதிரிகளை எடுத்து வருவார்கள். குடிவரவு குடியகல்வுத் திணைக்கள இணையத்தளத்தில் காலம் கடந்த தரவுகளே காணப்படுகின்றன. எனவே வர்த்தக விசாவில் வருவோர் எதிர்நோக்கும் சிக்கல்களை தீர்ப்பதற்கு சுற்றுலா அதிகாரசபையும், சுற்றுலா ஊக்குவிப்பு செயலகமும் உரிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென ஆடைக்கைத்தொழில் உற்பத்தியாளர்களின் சங்கங்களின் இணைச் செயலாளர் யொஹான் லோறன்ஸ் தெரிவித்துள்ளார். (ச-6)

## சிவபாலனின் நினைவேந்தல்



யாழ்ப்பாணம், செப்.13

யாழ். மாநகர முன்னாள் முதல்வரும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் சட்டத்துறைச் செயலாளருமான அமரர். பொன். சிவபாலனின் 26 ஆவது நினைவு தினம் அன்னாரது சித்தங்கேணி இல்லத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை நடைபெற்றது. (ச-45-27)

10 ஆவது சர்வதேச உலர் காலநிலை தொடர்பான மாநாடு யாழ்.பல்கலைக்கழக விவசாய பீடத்தின் ஏற்பாட்டில் விவசாயபீட கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்றது. விவசாயபீட பீடாதிபதி பேராசிரியர் க.பகீரதன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் எஸ்.சிறீசற்குணராஜா கலந்து கொண்டார்.சிறப்பு விருந்தினராக இந்திய தமிழ்நாடு விவசாய பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் இ. சோமசுந்தரம் கலந்து கொண்டார். (ச-113)



## மீளாய்வுக் கூட்டம்

யாழ்ப்பாணம், செப்.13

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச்சபை அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் உதவி மாவட்டச் செயலர் செல்வி உ.தர்சினி தலைமையில் யாழ்.மாவட்ட மாநாட்டு மண்டபத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

கூட்டத்தில் தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் உதவி இயக்குநர் தர்சன, உத்தியோகத்தர்களான திருமதி சுரேக்கா, அசித, மாவட்ட இணைப்பாளர் திருமதி அ.சியாமினி மற்றும் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா மாவட்டப் போதைத் தடுப்பு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர். (ச-25-66)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேள்வி அறிவித்தல்
## சபை நிதி 2024 (கட்டம் III மீள்கேள்வி, கட்டம் IV)
## வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்

1. வலி தெற்கு பிரதேச சபை சார்பாக உள்ளூர் அதிகார சபை பெறுகைக்குழுவின் தலைவர் கீழ் வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வேலைக்கான தகவுடையோரும் தகைமை பெற்றவருமான விலைக்கேள்வியாளர்களிடமிருந்து மூடப்பட்ட கடித உறையில் விலைக்கேள்விகளைக் கோருகின்றார்கள்.
2. விலைக்கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வி நடைமுறையின் மூலம் நடாத்தப்படும்.
3. விலைக்கேள்வியாளர்கள். நிர்மாணத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA) பதிவு பெற்ற கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தரத்தினை பதிவு செய்யப்பட்டிருப்பதுடன் கறுப்புப் பட்டியலில் பெயர் இடம் பெறாதவராயிருத்தலும் வேண்டும்.
4. தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் விலைக்கேள்வி ஆவணத்தில் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது மற்றும் மேலதிக தகவல்கள் விலைக்கேள்வி ஆவணத்தில் Schedule (பகுதி 5) இல் உள்ளடக்கப்பட்டுள்ளன. (SBD -03)
5. அக்கறை கொண்டுள்ள விலைக்கேள்வியாளர்கள் கீழே 6ல் குறிப்பிடப்பட்ட முகவரியில் மேலதிக தகவலைப் பெறலாம் என்பதுடன் அம் முகவரியில் மு.ப 9.00 மணியிலிருந்து பி.ப 3.00 மணிவரை அலுவலக நாட்களில் விலைக்கேள்வி ஆவணங்களைப் பரிசீலனை செய்யலாம்.
6. ஆர்வமுள்ள விலைக்கேள்வியாளர்கள் ஆங்கில மொழியிலான விலைக்கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதியொன்றை **செயலாளர், வலி தெற்கு பிரதேச சபை, சுன்னாகம் (தொலைபேசி இல: 021-2240017, தொலைநகல் 021-2240327) எனும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை 2024.09.13 – 2024.09.26 காலப்பகுதியில் மு.ப 9.00 மணியிலிருந்து பி.ப 3.00 மணிவரையில் சமர்ப்பித்து ரூ. 3,500.00** மீளளிக்கப்படாத தொகையினை பணமாகச் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.
7. விலைக்கேள்விகள் (மூலம், பிரதி) 2024.09.27ந் திகதி 10.30 மணிக்கு முன்னர் **தலைவர், உள்ளூர் அதிகார சபை பெறுகைக்குழு, வலி தெற்கு பிரதேச சபை, சுன்னாகம் எனும் முகவரியில் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ ஒப்படைத்தல் வேண்டும்.** காலந்தாழ்த்தப்பட்ட விலைக்கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் வேலைக்கான கேள்வி அடையாள இலக்கத்தினை தபாலுறையின் இடது மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். விலைக்கேள்விகள், அவைகளை மூடியவுடன் மேலேயுள்ள முகவரியில் சமுகமளித்திருக்கும் விலைக்கேள்வியாளர்களின் பிரதிநிதிகளது முன்னிலையில் திறக்கப்படும்.
8. விலைக்கேள்விக்கு முன்னரான கூட்டம் மேலே 6ல் குறிப்பிடப்பட்ட முகவரியில் மு.ப 10.30 மணிக்கு 2024.09.19 அன்று நடைபெறும்
9. கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறான கேள்விப் பிணைப்பொறுப்பு இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

கட்டம் 3 - மீள் கேள்வி

| இல | கேள்வி அடையாள இல | வேலைவிபரம் | அண்ணளவான மதிப்பீட்டுத் தொகை வரி நீங்கலாக (ரூ.மில்லியன்) | ஒப்பந்த காலம் (நாட்கள்) | தேவையான தரம் | கேள்வி சமர்ப்பிக்கப்படும் திகதியிலிருந்து கேள்வி செல்லுபடியாகும் | | கேள்விப் பிணைவிபரம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | காலம் (நாட்கள்) | திகதி | தொகை (ரு) | தேவைப்படும் காலம் |
| 01. | NP/14/41(15)/ 02/05/CF/ 2024/34 | தொகுதி B<br>1. அம்பலவாணர் வீதி புனரமைத்தல் (மிகுதி வேலை)<br>2. லயன் எஸ். மகாதேவா வீதி புனரமைத்தல் (கல்லூரி வீதி) | 2.84 | 60 | C7 and C8 (வீதிகள்) | 63 | 29.11.2024 | 29,000.00 | 27.12.2024 வரை |
| 02. | NP/14/41(15)/ 02/05/CF/ 2024/36 | தொகுதி D<br>1. மயிலங்காடு கிழக்கு ஞானவைரவர் வீதி கிளை ஒழுங்கை புனரமைத்தல்<br>2. குப்பிளான் காடாகடம்பை விவசாய வீதி கிளை ஒழுங்கை புனரமைத்தல் | 2.69 | 60 | C7 and C8 (வீதிகள்) | 63 | 29.11.2024 | 27,000.00 | 27.12.2024 வரை |
| **கட்டம் 4** | | | | | | | | | |
| 03. | NP/14/41(15)/ 02/05/CF/ 2024/39 | தொகுதி E<br>1. முத்துகிருஸ்ணர் ஒழுங்கை - மாணிக்கதியாகராஜர் வீதி சந்தி கொங்கிறீட் வீதி அமைத்தல்<br>2. கதிரமலை மூன்றாம் குறுக்கு ஒழுங்கை புனரமைத்தல் | 2.44 | 60 | C7 and C8 (வீதிகள்) | 63 | 29.11.2024 | 25,000.00 | 27.12.2024 வரை |
| 04. | NP/14/41(15)/ 02/05/CF/ 2024/40 | தொகுதி F<br>1. கந்தையா வீதி மூன்றாம் உப ஒழுங்கை புனரமைத்தல்<br>2. கார்பெட் வீதிகளிற்கான சோல்டர் அமைத்தல் (கதிரமலை. வீதி, கிணாமரம் வீதி, அம்பலவாணர் வீதி, மயிலிணி வீதி, மற்றும் சங்கம்புலவு இந்து மயானத்திற்கான கிரவல் உள்ளக பாதை அமைத்தல் ) | 2.17 | 60 | C7 and C8 (வீதிகள்) | 63 | 29.11.2024 | 22,000.00 | 27.12.2024 வரை |
| 05. | NP/14/41(15)/ 02/05/CF/ 2024/41 | தொகுதி G<br>1. சிங்கத்தின் கலட்டி வீதிபுனரமைத்தல் -கட்டம் 1 (மருதனார்மடம் சந்தையின் பின்பக்க வீதி)<br>2. சிங்கத்தின் கலட்டி வீதி புனரமைத்தல் - கட்டம் 2 | 2.22 | 60 | C7 and C8 (வீதிகள்) | 63 | 29.11.2024 | 23,000.00 | 27.12.2024 வரை |
| 06. | NP/14/41(15)/ 02/05/CF/ 2024/42 | தொகுதி H<br>1. வட்டுவினி வீதி புனரமைத்தல்<br>2. கடுகுநாவல் வீதி புனரமைத்தல் | 2.27 | 60 | C7 and C8 (வீதிகள்) | 63 | 29.11.2024 | 23,000.00 | 27.12.2024 வரை |
| 07. | NP/14/41(15)/ 02/05/CF/ 2024/43 | உசத்தியோடை ஆலங்கட்டை வீதி புனரமைத்தல் | 2.01 | 60 | C7 and C8 (வீதிகள்) | 63 | 29.11.2024 | 21,000.00 | 27.12.2024 வரை |
| 08. | NP/14/41(15)/ 02/05/CF/ 2024/44 | திடற்புலம் வீதி புனரமைத்தல் (மிகுதி வேலை) | 2.78 | 60 | C7 and C8 (வீதிகள்) | 63 | 29.11.2024 | 28,000.00 | 27.12.2024 வரை |
| 09. | NP/14/41(15)/ 02/05/CF/ 2024/45 | தொகுதி I<br>1. ஈவினை பிள்ளையார் வீதி ஐயனார் வீதி இணைப்பு வீதி புனரமைத்தல்<br>2. அறிஞர் ஐயன்னா வீதி புனரமைத்தல் | 2.89 | 60 | C7 and C8 (வீதிகள்) | 63 | 29.11.2024 | 29,000.00 | 27.12.2024 வரை |
| 10. | NP/14/41(15)/ 02/05/CF/ 2024/46 | தொகுதி J<br>1. ஏழாலை உப அலுவலத்திற்கான மலசலகூடம் அமைத்தல்<br>2. புன்னாலைக்கட்டுவன் மைதானத்திற்கான மலசலகூடம் அமைத்தல் | 2.82 | 60 | C7 and C8 (கட்டடம்) | 63 | 29.11.2024 | 29,000.00 | 27.12.2024 வரை |
| 11. | NP/14/41(15)/ 02/05/CF/ 2024/47 | தொகுதி K<br>1. வலிகாமம் தெற்கு பிரதேசசபை தலைமை அலுவலக கட்டடத்திற்கான அபிவிருத்தி வேலைகள்<br>2. வலிகாமம் தெற்கு பிரதேசசபை சுன்னாகம் பொது நூலக படிக்கட்டிற்கான கைபிடி அமைத்தல் | 4.24 | 75 | C7 and C8 (கட்டடம்) | 63 | 29.11.2024 | 43,000.00 | 27.12.2024 வரை |
| 12. | NP/14/41(15)/ 02/05/CF/ 2024/48 | பூவோடை மயானத்திற்கான மதில் அமைத்தல் - கட்டம் 3 | 1.12 | 60 | C9 and C8 (கட்டடம்) | 63 | 29.11.2024 | 12,000.00 | 27.12.2024 வரை |

"விலைக்கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வியின் மூலம் நடாத்தப்படும். இக் கொள்வனவின் மூலம் நடாத்தப்படும் வேலைக்கான மதிப்பீட்டுத் தொகை (VATமற்றும் வேறுவரிகள்) 50 மில்லியனினுள் இருப்பின். பிராந்திய முன்னுரிமை மற்றும் CIDA தர முன்னுரிமை என்பன பொதுநிதிச் சுற்றறிக்கை இல 04/2016(iii) பின்பற்றப்படும்".

தலைவர்
உள்ளூர் அதிகார சபை பெறுகைக்குழு,
வலி தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்.

(CR/43208) J-1

13.09.2024

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஐக்கிய மக்கள் சக்தி யாழில் பிரசாரம்

யாழ்ப்பாணம், செப்.12

ஐக்கிய மக்கள் சக்தியின் தேர்தல் பிரசாரக் கூட்டம் தமிழரசுக் கட்சி உறுப்பினர் அகிலன் முத்துக்குமார சாமியின் ஏற்பாட்டில் யாழ். கொடிகாமம் நட்சத்திர மஹால் மண்டபத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை பி.ப. 3 மணிக்கு இடம்பெற்றது.

நிகழ்வில் தென்மராட்சி விளையாட்டுக் கழகங்களுக்கிடையில் நடத்தப்பட்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் வெற்றியீட்டியோருக்கு வெற்றிக் கேடயங்களும் வழங்கிவைக்கப்பட்டன.

நிகழ்வில் ஜிலானி பிரேமதாஸ, உமாசந்திரா பிரகாஷ் ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-45-20)



## ஓட்டோக்களுக்கு ஸ்ரிக்கர்

யாழ்ப்பாணம், செப்.13

சாவகச்சேரி நகரசபைக்குட்பட்ட பகுதிகளில் சேவையில் ஈடுபடும் முச்சக்கரவண்டிகளுக்கு ஸ்ரிக்கர் ஒட்டும் பணிகளை சாவகச்சேரி பொலிஸார் மற்றும் சாவகச்சேரி நகரசபையினர் கடந்த செவ்வாய்க்கிழமை ஆரம்பித்துள்ள னர். நகரசபையின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கட்டண சேவையில் ஈடுபடும் முச்சக்கரவண்டிகள் உரிய ஸ்ரிக்கரை நகரசபை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். ஸ்ரிக்கர் இல்லாத முச்சக்கரவண்டிகள் சபை எல்லைக்குட்பட்ட பகுதியில் சேவையில் ஈடுபடமுடியாது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-45-9)

## மின்விசிறிகள் திருட்டு சந்தேகநபர்கள் கைது

யாழ்ப்பாணம், செப். 13

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பிலுள்ள பாடசாலையொன்றில் மின்விசிறிகளைத் திருடிய குற்றச்சாட்டில் 3 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த வாரம் புதுக்குடியிருப்பு கைவேலி கணேசா வித்தியாசாலையில் பாவனையில் இருந்த 4 மின்விசிறிகள் களவாடப்பட்டுள்ளன என்று புதுக்குடியி ருப்பு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. முறைப்பாட்டுக்கமைய பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளில் மின்விசிறிகளைத் திருடி விற்ற குற்றச்சாட்டில் ஒருவரும் அதனைக் கொள்வனவுசெய்த குற்றச்சாட்டில் இருவருமாக மூவர் கைது செய்யப்பட்டனர். சந்தேகநபர்களையும் சான்றுப் பொருள்களையும் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த புதுக்குடியிருப்பு பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச-22,19)

# மரண அறிவித்தல்

மண்ணில் 07 . 03 . 1991



விண்ணில் 11 . 09 . 2024

## சிவகரன் யுடிற்றா

இல.337, புன்னை நீராவி, பிரமந்தனாற்றை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் மற்றும் அல்லாரை வீதி, மீசாலை கிழக்கு மீசாலையை வதிவிடமாகவும் கொண்ட சிவகரன் யுடிற்றா கடந்த 11.09.2024 புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்வநாயகம் மற்றும் விமலேஸ்வரி தம்பதியரின் பாசமிகு மகளும், அருளானந்தசிவம் - திலகவதி தம்பதியரின் அன்பு மருமகளும், சிவகரனின் அன்பு மனைவியும் ஹர்சிகனின் பாசமிகு தாயாரும், சயந்தனின் அன்புச் சகோதரியும், சங்கர், கலாகரன், ஜீவிக்கா, யஸ்மினா, லாவன்யா ஆகியோரின் மைத்துனியும், லக்ஷமி, வெற்றி, அஸ்விகன், ஆருக்ஷா ஆகியோரின அன்புச் சித்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.09.2024) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு இல. 337, புன்னைநீராவி பிரமந்தனாற்றில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப 2.00 மணிக்கு நெடுமோட்டை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

தோற்றம் 10 . 01 . 1942



மறைவு 12 . 09 . 2024

## வீரகத்திப்பிள்ளை சிவகாமசுந்தரம்

உடுத்துறை தெற்கு, தாளையடியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வீரகத்திப்பிள்ளை சிவகாமசுந்தரம் அவர்கள் நேற்று (12.09.2024) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சபாபதிப்பிள்ளை - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற வீரகத்திப்பிள்ளையின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற செல்வரத்தினத்தின் சகோதரியும், காலஞ்சென்ற பாக்கியலட்சுமி, விமலா, தங்கவேலாயுதம் ஆகியோரின் மைத்துனியும், காலஞ்சென்ற குமரன், சரவணன், சேந்தன் (ஆசிரியர் - கொக்குவில் ஸ்ரீ இராம கிருஸ்ண வித்தியாசாலை & உயரப்புலம் மெதடிஸ்த மிசன் வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், கோமளா (ஆசிரியர் - வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி), அனுசா ஆகியோரின் மாமியாரும், கௌரீசன், அபிராம், பைரவி, கேசிகன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.09.2024) வெள்ளிக்கிழமை அரசடி ஒழுங்கை, திருநெல்வேலி கிழக்கில் உள்ள அவரின் இளையமகனின் வீட்டில் நடைபெற்று, பூதவுடல் மாலை 03.00 மணியளவில் திருநெல்வேலி இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அரசடி ஒழுங்கை,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.

தகவல்:
வீ.சரவணன் - 076 166 3613
வீ.சேந்தன் - 077 8414 467

# ரஷ்யாவால் நிலாவில் அணுமின் நிலையம்

## திட்டத்தில் இணைவதற்கு இந்தியா– சீனா விருப்பம்

மொஸ்கோ, செப். 13

நிலவில் அணுமின் நிலையம் அமைக்க ரஷ்யா திட்டமிட்டுள்ளது. இதில் இணைந்து செயற்பட இந்தியாவும் சீனாவும் விருப்பம் தெரிவித்துள்ளன.

ரஷ்ய அணுசக்தி அமைப்பின் தலைவர் அலெக்சி லிகாசெவ் இந்தத் தகவலை ஊடகங்களிடம் பகிரங்கப்படுத்தியுள்ளார்.

அரை மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் வகையில் இது அமைக்கப்படவுள்ளது. பல சர்வதேச விண்வெளித் திட்டங்களுக்கு அடித்தளம் அமைக்கக்கூடிய வகையில் நாங்கள் முயற்சித்து வருகிறோம்

நிலவில் அணுமின் நிலையம் அமைப்பது ஒரு சிக்கலான முயற்சியாக இருக்கும். எனினும், மனிதர்களை நேரடியாக ஈடுபடுத்தாமல் தானியங்கி முறையில் இந்த அணுமின் நிலையம் கட்டமைக்கப்படும் என்றும், இந்தத் திட்டத்துக்கான தொழில்நுட்பத் தீர்வுகள் முடிவடையும் நிலையில் உள்ளன என்றும் ரஷ்ய அணுசக்தி அமைப்பின் தலைவர் அலெக்சி லிகாசெவ் மேலும் தெரிவித்துள்ளார். (ம)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்

## செல்வி துரைசிங்கம் சிவானந்தராணி

அமரர் செல்வி துரைசிங்கம் சிவானந்தராணி அவர்களின் மறைவு-14.08.2024

நெஞ்சம் மறக்கவில்லை ! அன்னமிட்டு அரவணைத்த கரம்தனையும்,அறிவுதனை புகட்டிய குரல்தனையும் மருமகளை, சொல்லமுடியாத நினைவுகளால் வாட்டுகிறது நேர் கொண்ட பார்வை தனை உங்களிடத்தில் இருந்து கற்றுக் கொண்டேன். நிமிர்ந்த வீறு நடைதனை உங்கள் பாதங்களிலிலும் இருந்து என் பாதம் கற்றுக்கொண்டது போல உணர்ந்து கொண்டேன். அஞ்சிடாத திடம் கொண்ட இதயத்தில் இருந்து வரும் சொற்களையும் கற்றுக்கொண்டேன்.

இறுதிவரை தலை குனியாது வாழ்ந்த வாழ்கைதனை, இப்படித்தான் வாழ வேண்டும் என உணர்கிறேன். களங்கமற்ற கன்னியாக வாழ்ந்து காலத்தை கழித்த நீங்கள் என் கண்களுக்கு கண்ணகி போல தென்படுகிறீர்கள். அர்த்த ஜாமத்தில் சொப்பனத்தில் கொண்ட பயம்தனை, அதிகாலை மட்டும் என்னை அரவணைத்த கரம் இவ்வுலகில் இல்லையே என என்னால் நம்பமுடியவில்லையே பெரியமாமி. எதுவும் அறியாத உங்கள் தங்கை எதற்கு அவசரப்பட்டா அக்கா என கேள்வி மேல் கேள்வி எழுப்புகிறா.

திரும்ப நாளை வருவா என நினைந்த தங்கையை தவிக்கவிட்டதே தலைவிதி. வீட்டில் இருக்கும் ஒவ்வொரு பொருட்களும் உங்கள் நினைவுகளால் தங்கையை வாட்டுகிறது. திரும்பும் இடம் எல்லாம் அக்காவின் நினைவுகள். பூஞ்சோலைகளும் மரங்களும் தன் கவலையை காட்ட வாடிவதங்கி தன் உணர்வுதனை வெளிக்காட்டுகிறது.

திக்குத் தெரியாத காட்டில் இருப்பது போல உணர்கிறா உங்கள் தங்கை. என்றும் தன் அருகில் இருந்த அக்காவை தேடுகிறா தங்கை. ஆனால் அக்காவின் அசைவுகள் இவ்வுலகில் இன்றும் இருப்பது போலவே உணர்வை தம்பிமார் உணர்கிறார்கள். அன்னையாக தன்னை அரவணைத்த கைதனை நாகேஸ் தேடுகிறா. இருட்டில் இருக்கலாகாது குலதெய்வம் என ஒளியை மாலைவேளைதனில் ஏற்றியவளை, இறைவன் மாலைதனில், அழிந்து போகும் உடலை உதறிவிட்டு என்றென்றும் அழியாத ஆத்மாவை தன்னுடன் இணைந்துக்கொண்டது. பதினாறு திசைகளிலும் ஒரு வாரத்தின் முன், இருதினம் முன், நேற்றும் கண்டேன்.என்ற வண்ணமே சொற்கள் காதில் ரீங்காரமாக கேட்ட வண்ணம் உள்ளது. இன்று நீங்கள் நாளை நாங்கள். ஐம்பூதத்தினால் ஆன உடல் அழிகிறது. ஆனால் ஆத்மா அழிவதில்லை. பெரியமாமி உங்கள் ஆத்மா அழியாதது போல,உங்கள் நினைவுகளும் அழியவில்லை.

கல் மனம் என சிலர் உங்களில் உணர்ந்தார்கள். பலர் உங்களின் கனிந்த மனத்தை உணர்ந்தார்கள். ஆட்களை அளவிடும் கருவியாக இவ்வுலகில் பலர் இருக்கிறார்கள். ஆனால் இவ்உலகில் அறிவை அளவிடுபவர் யாருமில்லை . இந்த ஆத்மா தனக்கான இடத்தை அடைந்து விட்டது என்ற ஆனந்தத்தில் இந்த மருமகளின் மனமார்ந்த ஆசீர்வாதங்கள் அந்த பகவானுக்கே உரித்தாகட்டும்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

மருமகள்
விஹாஷினி - பிறேம்குமார் (கண்ணன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலை கல்லறைகள் பற்றிய மீள் அறிவித்தல்

யாழ்ப்பாணம். புனித கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலையில் பெரும் எண்ணிக்கையிலான கல்லறைகள் பல வருடங்களாக எதுவித பராமரிப்போ. திருத்தமோ இல்லாமல் சிதைவுற்றும் பெயர் விபரங்கள் எதுவும் இன்றி உள்ளன. இந்த நிலையில் உள்ள கல்லறைகள் எம்மால் அடையாளப் படுத்தப்பட்டுள்ளன.

தமது கல்லறைகளுக்குரிய சான்றுப் பத்திரம் வைத்திருப்போர் அவற்றை பேராலயப் பணிமனையில் பதிவு செய்து புதுப்பித்துக் கொள்ளும்படி ஏற்கனவே அறிவிக்கப்பட்டது. (பாதுகாவலன்: 24.02.2019, உதயன். வலம்புரி: 01.03.2019, தினக்குரல்: 06.03.2019, இப்பத்திரிகைகளின் இணையப் பதிப்புகள்) எனினும் பலர் இதனை கருத்தில் கொள்ளவில்லை.

**மீண்டும் கேட்டுக்கொள்கின்றோம்**

**இலங்கையிலோ, வெளிநாட்டிலோ கல்லறைகளுக்குரிய சான்றுப்பத்திரம் வைத்திருப்போர் தயவு செய்து பேராலயப் பணிமனையில் தொடர்பு கொண்டு பதிவினை புதுப்பித்துக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.**

நவம்பர் மாதம் 2ம் திகதி: நம் உறவுகளின் கல்லறைகள் தரிசித்து வேண்டுதல் செய்யும் நாள். இந்நிகழ்வுக்குப் பின்னரும் யாரும் கவனிக்காத. சிதைந்த நிலையில் உள்ள கல்லறைகள் யாழ்ப்பாண பேராலயப் பொறுப்பில் எடுத்து அவ்விடங்கள் தேவைப்படுவோர்க்கு வழங்க வேண்டியுள்ளது. எனவே இதுபற்றி ஏனையவர்களுக்கும் தெரியப்படுத்தி விரைவில் எமக்கு உதவும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

அருட்திரு. ம. ஜெறோ செல்வநாயகம்.
பேராலய பங்குதந்தை,
நிர்வாகி. புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலை.

(CS/56184) J-1



## வவுனியா இ.போ.ச. சாலை நேற்றுப் பணிப்புறக்கணிப்பு

### பயணிகள் அசௌகரியம்

**வவுனியா, செப்.13**

**தமது சாரதியைத் தாக்கியவர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு கோரி இலங்கைப் போக்குவரத்துச்சபையின் வவுனியா சாலை ஊழியர்கள் நேற்று பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.**

வவுனியா புதிய பேருந்து நிலையத்தில் நேற்றுமுன்தினம் கடமையில் இருந்த அரச பேருந்தின் நடத்துநர் மற்றும் ஊழியர்கள் மீது வவுனியாவிலிருந்து கொழும்புநோக்கிப் பயணிக்கும் தனியார் பேருந்தின் ஊழியர்கள் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இதில் அரச பேருந்து தரப்பைச் சேர்ந்த ஒருவர் காயமடைந்த நிலையில் வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். இந்தநிலையில் தாக்குதல் மேற்கொண்டவர்களை கைதுசெய்யுமாறு தெரிவித்து போக்குவரத்துச்சபையின் வவுனியா சாலை ஊழியர்கள் நேற்றுக் காலை முதல் பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

தமது கோரிக்கைக்கு உரிய நடவடிக்கை எடுக்கத்தவறும் பட்சத்தில் வடமாகாண ரீதியாக பணிப்பகிஷ்கரிப்பு முன்னெடுக்கப்படும் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

அதேவேளை குறித்த பணிப்பகிஷ்கரிப்பால் பயணிகள் பல்வேறு அசௌகரியங்களுக்கு உள்ளாகினர் என்று தெரிவிக்கப்படுகிறது. (ச-110)

## ஆதன உரிமை பெயர்மாற்ற அறிவித்தல்

வலிகாமம் வடக்கு பிரதேசசபை :- மல்லாகம் உப அலுவலகம்

உரிமையாளர் பெயர் :- திரு. பாலசிங்கம் நிரோசன்
விண்ணப்பதாரர் பெயர் :- திரு. பாலசிங்கம் நிரோசன்
முகவரி :- குருவளை வீதி. அளவெட்டி தெற்கு.

வலிகாமம் வடக்கு பிரதேசசபையின் மல்லாகம் உப அலுவலகத்திற்கு உட்பட்ட வட்டாரம் 19. குருவளை வீதி ஆதன இலக்கம் 15/12 இல் அமைந்துள்ள மல்லாகம் கோவிற்பற்று அளவெட்டி இறை "மாப்பிள்ளை வரவை" என்ற ஆதனம் உரிமைகோருபவர் இன்பராசா என்ற பெயரில் எமது சோலைவரி ஆதனப் பதிவேட்டில் பதியப்பட்டு காணப்படுகின்றது.
"மாப்பிள்ளை வரவை என்ற நிலப்பரப்பு 1 1/2 விஸ்தீரணமுள்ள ஆதனம் பிரசித்த நொத்தாரிசு ச.கிருஸ்ணவேணி முகதாவில் 3642 ஆம் இலக்கத்தில் 30.06.2018 ஆம் திகதியில் நிறைவேறிய அறுதி உறுதி மூலம் விண்ணப்பதாரரை வந்தடைந்துள்ளது. 3642 ம் இலக்க உறுதியில் 1ம் ஆதன அட்டவணையில் இவ்வாதனம் நன்கு விபரிக்கப்பட்டுள்ளதுடன் குறித்த உறுதி யாழ்ப்பாண காணிப்பதிவகத்தில் G110/94 இலக்க காணிப் பதிவுப் புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள காணிப் பதிவுப்புத்தகப்பிரதி இவ்விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மேலும் 3642ம் இலக்க உறுதியில் அதற்கான தாயுறுதியாக குறிப்பிடப்பட்டுள்ள கொழும்பு பிரசித்த நொத்தாரிசு க. பிரபாகரன் முகதாவில் 983ம் இலக்கத்தில் 01.04.2017ம் திகதியில் நிறைவேறிய நன்கொடை உறுதி மூலமாக தெய்வநாயகம் தெய்வேந்திரனை வந்தடைந்துள்ளது. மேலும் 983ம் இலக்க உறுதியில் 2ம் ஆதன அட்டவணையில் இவ்வாதனம் நன்கு விபரிக்கப்பட்டுள்ளதுடன் யாழ்ப்பாண காணிப்பதிவகத்தில் G84/95 இலக்க காணிப் பதிவுப் புத்த கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள காணிப்பதிவுப் புத்தகப் பிரதி இவ்விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. 983ம் இலக்க உறுதியில் 2ம் ஆதன அட்டவணையில் குறித்த ஆதனத்திற்கான தாயுறுதியாக யாழ்ப்பாண பிரசித்த நொத்தாரிசு T.S. துரையப்பா முகதாவில் 4640ம் இலக்கத்தில் 26.02.1910ம் திகதியில் நிறைவேறிய அறுதி உறுதி குறிப்பிடப்பட்டுள்ளது. குறித்த 4640 உறுதி காணிப்பதிவகத்தில் தொலைந்துவிட்டதாக குறித்து வழங்கப்பட்ட கடிதம் இவ்விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மேலும் இலக்க உறுதியில் 2ம் ஆதன அட்டவணையில் குறித்த ஆதனத்தை தெய்வநாயகம் தெய்வேந்திரனுக்கு நன்கொடையளித்த தெய்வநாயகம் தர்மகுலசிங்கத்திற்கும். தெய்வநாயகம் தர்மரத்தினத்திற்கும் வந்தடைந்த வழியுரிமை (Succession) தொடர்பில் தொடர்பில் வெளிப்படுத்துகை (Tittle Declaration) செய்யப்பட்டுள்ளது. குறித்த உரித்து வெளிப்படுத்துகையில் குறித்த ஆதனம் நன்கொடை வழங்கு நர்களான தெய்வநாயகம் தர்மகுலசிங்கத்திற்கும். தெய்வநாயகம் தர்மரத்தினத்திற்கும் அவரது தந்தை கந்தையா தெய்வ நாயகத்தின் பெற்றோர் பொன்னம்பலம் கந்தையாவுக்கும். கந்தையா செல்லமுத்துவுக்கும் சொந்தமாக விருந்ததுடன் அவர்களது இரு வாரிசுகளாக கந்தையா தெய்வநாயகமும். கந்தையா சூரணமும் இருந்ததுடன் கந்தையா சூரணத்திற்கு சீதனம் வழங்கப்பட்டதாலும் பொன்னம்பலம் கந்தையா மற்றும் கந்தையா செல்லமுத்து ஆகியோரின் இறப்பின் மீது தமது பிதா கந்தையா தெய்வநாயகத்திற்கு வழியுரிமையாக வந்தடைந்து அவரது இறப்பின் மீது தம்மை வந்தடைந்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ் விண்ணப்பத்துடன் கடந்த 30 வருடங்களுக்கான ஆதன உரித்தை குறித்துரைக்கும் காணிப்பதிவுப் புத்தக இருமடித்தாள் சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை.

கடந்த 30 வருடங்களுக்கான ஆதன உரித்தைக் குறித்துரைப்பதற்கான உறுதிகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**ஆதன விபரம்**

வடமாகாணம். யாழ்ப்பாண மாவட்டம் வலிவடக்குப் பகுதி. மல்லாகம் கோவிற்பற்று அளவெட்டி இறை "மாப்பிள்ளை வரவை" நிலப்பரப்பு 04 குளி 8ம் பனைமரங்களும் இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் வி.ரி. பாலசுப்பிரமணியம் அவர்களால் 2011.04.11ம் திகதி அளந்து வரைந்த 4661ம் இலக்கபடத்தில் துண்டு 1 என சுட்டிய நிலப்பரப்பு 4 குளி 8 என காட்டப்பட்டுள்ளது. இதில் வடக்குப் பக்கமாக நிலப்பரப்பு 1 1/2ம் பனைமரங்களும் இந்த நிலப்பரப்பு ஒன்ற ரைக்கும் எல்லைகள்

கிழக்கு :- பி. மகேஸ்குமாரின் ஆதனம்
வடக்கு :- தாமர் சபாபதிப்பிள்ளையின் ஆதனம்
மேற்கு :- வைரமுத்து அமிர்தநாயகத்தின் ஆதனம்
தெற்கு :- கணேசன் அருள்ராஜா பெண் சாந்தினியின் ஆதனமும் 5 முழ பாதை முகப்பும்
இவ்வெல்லைப்படி இதனடாங்கலும் அதனைச் சேர்ந்தவைகளும்

02.மேற்படி அளவெட்டி இறை "மாப்பிள்ளை வரவை" நிலப்பரப்பு 4 குளி 8 பனைமரங்களும் இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் வி.ரி. பாலசுப்பிரமணியம் அவர்களால் 2011.04.11 ம் திகதி அளந்து வரைந்த 4661ம் இலக்கப்படத்தில் துண்டு 1 என சுட்டப்பட்டுள்ளது. இதில் கிழக்குப் பக்கமாக நில.பர 00 குளி 08 என சுட்டிய 05 முழ அகல பாதை அகல பாதை நிலம் இந்த குளி எட்டுக்கும் எல்லைகள்

கிழக்கு :- பி. மகேஸ்குமாரின் ஆதனம்
வடக்கு :- பாலசிங்கம் நிரோசனின் ஆதனம்
மேற்கு :- கணேஸ் கைம்பெண் இந்திராவினதும், கணேசன் அருள்ராஜா பெண் சாந்தினியினதும் ஆதனங்கள்
தெற்கு :- 10 அடி அகல பாதை

இவ்வெல்லைப்படி இதனடாங்கலும் இதில் சொரியலாய் 1/3 பங்கும். பாதைப்பாவிப்புரித்தும் அதனைச் சேர்ந்தவைகளும்.

மேற்குறித்த ஆதனத்தை பாலசிங்கம் நிரோசன் என்னும் பெயரில் ஆதன பெயர்மாற்றம் செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து முப்பது (30) நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ வெளிநாட்டில் வசிப்பவர்களாக இருந்தால் இங்குள்ள உறவினர்கள் ஊடாகவோ ஆட்சேபனையைத் தெரிவிக்குமாறும் யாரும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் பாலசிங்கம் நிரோசன் பெயருக்கு ஆதன உரிமைமாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் இந்த ஆதன உரிமைமாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் வடக்கு பிரதேசசபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**செயலாளர்
வலிகாமம் வடக்கு பிரதேசசபை
காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி)**



யாழ்.கனகரட்ணம் மகா வித்தியாலய மாணவர்களுக்கான பாடசாலை வரவு ஒழுங்கு, சிறுவர் பாதுகாப்புத் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை நல்லூர்ப் பிரதேச செயலரின் வழிகாட்டலில் சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தரால் நிகழ்த்தப்பட்டது. (ச-22,66)

## வேலையாள் தேவை

யாழ் மாநகர எல்லைக்குள் உள்ள சிறுவர் பாடசாலைக்கு துப்புரவு பணிக்கும், சிறுவர் பராமரிப்புப் பணிக்கும் வேலையாள் தேவை.
வேலை நேரம் காலை 7.30am முதல் 2.30pm வரை.
தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண் :

**076 807 5430**

(CS/56181) J-1

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



**கடந்த 16.08.2024 அன்று இறைபதமடைந்த
எங்கள் குடும்பத் தலைவர்**

### இராஜதுரை இரகுபதிராஜா (சுபாஷ்)

**திதி : துவாதசி**


அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (13.09.2024) வெள்ளிக்கிழமை காலை 7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும், வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளைமறுதினம் (15.09.2024) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அவரது இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**குடும்பத்தினர்.**
072 841 1057
077 469 1203

12, ஆடியபாதம் வீதி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.
(CS/56165) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெல்லிப்பழை துர்க்காதேவி கைலாசவாகனத்தில் உலா!



யாழ்ப்பாணம், செப். 13


வரலாற்றுப் பிரசித்திபெற்ற, தெல்லிப்பழை சிறிதுர்க்காதேவி ஆலய குரோதி வருட மஹோற்சவப் பெருவிழாவின் ஒன்பதாம் நாள் மாலை உற்சவமான கைலாசவாகன உற்சவம் நேற்று வியாழக்கிழமை மாலை சிறப்புற இடம்பெற்றது. இதன்போது துர்க்கை அம்பாள் சமேத சிவலிங்கப் பெருமான், விநாயகப் பெருமான், முருகப் பெருமான் ஆகிய முத்தெய்வங்களும் மின்விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட அழகிய கைலாச வாகனத்தில் அடியவர்கள் புடைசூழ வெளி வீதியில் உலா வந்தனர். (ம-66)



# நெல்லியடி பாடசாலையில் குடிநீர் இயந்திரம் வழங்கல்

யாழ்ப்பாணம், செப். 13

நெல்லியடி மெதடிஸ்த மிசன் தமிழ்க் கலவன் பாடசாலையின் கோரிக்கைக்கு அமைவாக சந்நிதியான் ஆச்சிரம நிர்வாகத்தின் நிதிப் பங்களிப்பில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் இயந்திரம் பொருத்தப்பட்டு நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை காலை 10.15 மணியளவில் திறந்து வைக்கப்பட்டது.



பாடசாலை அதிபர் நாகராஜா ரவீந்திரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகள் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு புதிய சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் இயந்திரத் தொகுதியைத் திறந்து பாடசாலைச் சமூகத்திடம் கையளித்தார். (ம-22,66)


## பெறுகை அறிவித்தல்
## வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்
## முத்திரை தீர்வை நிதி- 2023

1. வலிகாமம் மேற்கு பிரதேசசபை முத்திரை தீர்வை நிதி யைக் கொண்டு கீழ்க்காட்டப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வேலைத்திட்டத்திற்கு கொடுப்பனவிற்கென பயன்படுத்த உத்தேசித்துள்ளது.
2. தேசிய போட்டிக்கோரல் நடைமுறைக்கு அமைவாக கேள்வி கோரப்படுகின்றது. ஆயினும் நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட03/2020 (i) ஆம் இலக்க 11.01.2021 ஆந் திகதிய04/2016(ii) ஆம் இலக்க 08.05.2019, ஆந் திகதிய 04/2016 (iii) ஆம் இலக்க 18.02.2021 ஆந் திகதிய மற்றும் 04{2016(iv) இலக்க 09.02.2023 ஆம் திகதிய பொதுநிதிச் சுற்றறிக்கைகளுக்கு அமைவாக வடமாகாணத்தைச் சார்ந்தவருக்கும் மற்றும் வேண்டப்படும் உரியதரத்தை கொண்டிருப்போருக்கும் முன்னுரிமையளிக்கப்படும்.
3. தலைவர், பெறுகைக்குழு, வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம், அவர்களினால் தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்தும் முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைக்காக கோரப்படுகின்றது.
4. கேள்விபெறத் தகுதியுடையவராவதற்கு, வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையில் காட்டியபடி பொருத்தமானதரத்தில், நிர்மாண தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும். அத்துடன் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமாகவும் இருத்தல் வேண்டும்.
5. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி IV இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி V இல் காட்டப்பட்டுள்ளது.
6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் சுழிபுரத்தில் அமைந்துள்ள வலிகாமம் மேற்குபிரதேச சபை (தொலைபேசி : 0212250144, தொலைநகல் : 0212250144, மின்னஞ்சல் : valiwestps@gmail.com) இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் காலை 09.00 மணிமுதல் பி.ப 15.00 மணிவரையிலான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்
7. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கிலமொழியில் வலிகாமம் மேற்குபிரதேச சபை, சுழிபுரம், என்னும் இடத்தில் 13.09.2024ம் திகதியிலிருந்து 27.09.2024 ம் திகதி வரை சனி ஞாயிறு தவிர்ந்த வேலைநாட்களில் காலை 09.00 மணிமுதல் பி.ப 15.00 வரை மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.3000.00 (வரிநீங்கலாக) இனை செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத் தொகை பணமாகச் செலுத்தப்படவேண்டும்.
8. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து செயலாளர், வலிகாமம் மேற்குபிரதேச சபை, சுழிபுரம், என்னும் முகவரிக்கு 30.09.2024 ம் திகதி பி.ப 02.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கப்பட வேண்டும். அல்லது மேற்படி அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் இடப்பட வேண்டும். பிந்தியகேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்வி நேரம் முடிவடைந்தவுடன் வருகைதரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். கிடைக்கப் பெற்ற கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக் கேள்வியின் ஒரு பகுதியினை மட்டும் ஏற்றுக் கொள்வதற்கு அல்லது இப்பெறுகையை முழுமையாக இரத்துச் செய்வதற்கு பெறுகைக் குழுவிற்கு அதிகாரமுண்டு.
9. கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்

| தொ. இல | வேலைவிபரம் | மதிப்பீட்டுத் தொகை (வரி நீங்கலாக) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | கேள்விசமர்ப்பிக்கப்படும் இறுதித்திகதியிலிருந்து கேள்விசெல்லுபடியாகும் காலம். | | வேண்டப்படும் கேள்விப்பிணை | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | செல்லுபடியாகும் நாட்கள் | திகதி | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| 01 | Renovation of Church Road and 9th Lane of Church Road NP/14/41(17)/02/SD/13/ Church Rd/2024 | 1.824 Mn. | 30 நாட்கள் | C9&C8 Highway | 49 நாட்கள் | 18.11. 2024 | Rs. 19. 000 .00 | 16.12. 2024 |

கேள்விதிறப்பதற்கான முன்னோடிக் கூட்டம் வலிகாமம் மேற்குபிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் 25.09.2024 அன்று மு.ப.10.00 மணிக்கு நடைபெறும். இக் கூட்டத்தில் ஆர்வமுள்ள ஒப்பந்தகாரர்கள் தமது சொந்தசெலவில் கலந்து கொள்ளமுடியும்.

தலைவர்,
பெறுகைக் குழு,
வலிகாமம் மேற்குபிரதேச சபை,
சுழிபுரம்.
13.09.2024

(CR/43214) J-1


# போலிப் பரப்புரைக்காக திஸ்ஸவுக்கு வழக்கு!

கொழும்பு, செப். 13

நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்காவிடமிருந்து 100 கோடி ரூபா நட்டஈடு கோரி நாடாளுமன்ற உறுப்பினர் ஹரிணி அமரசூரியவால் கொழும்பு மாவட்ட நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கண்டி தலதா பெரஹரா ஐக்கிய மக்கள் சக்தியின் ஆட்சியின் கீழ் நிறுத்தப்படும் என்று உண்மையற்ற ஒரு செய்தியை திஸ்ஸ அத்தநாயக்க வெளிப்படுத்தியுள்ளார் என்று ஹரிணி அமரசூரிய தனது மனுவில் தெரிவித்துள்ளார். (ச-சி)

# ஆண்டுநிறைவு

யாழ்ப்பாணம், செப். 13

சுன்னாகம் மஹிந்திரா ஐடியல் பினான்ஸ் கிளையின் 3ஆம் ஆண்டு நிறைவு நிகழ்வு எதிர்வரும் 19ஆம் திகதி காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது. கிளையின் முகாமையாளர் த.சுகந்தன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் உதவிப் பொதுமுகாமையாளர் (அடகுப் பிரிவு) பிரதீப் டி சில்வா, உதவி பொது முகாமையாளர் (மனிதவளம்) விஸ்மித் காரியவசம் உள்ளிட்ட பலரும் கலந்து கொள்ளவுள்ளனர். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## போதைப்பொருள் கட்டுப்பாடு யாழில் பயிற்சிப் பட்டறை!

யாழ்ப்பாணம், செப். 13

வடமாகாணத்தில் சமூக மட்டங்களில் இணைந்து செயற்படுகின்ற அரச சார்பற்ற நிறுவன பிரதிநிதிகள் 40 பேருக்கு இருநாள் முழு நேர பயிற்சிநெறி அரச சார்பாற்ற நிறுவனங்களின் யாழ் மாவட்ட இணைப்பாளர் தயாபரன் தலைமையில் யாழ். பொதுநூலக மாநாட்டு மண்டபத்தில் நேற்றும் நேற்றுமுன்தினமும் நடைபெற்றது.

முதல் நாள் செயலமர்வில் போதைப் பொருள் பாவனையினை எவ்வாறு தடுக்கலாம் என்பது தொடர்பில் ஆராயப்பட்டது. கிராமிய மட்ட மற்றும் சிவில் சமூக, அரச சார்பற்ற நிறுவனங்களை போதைப் பொருள் தடுப்பு செயற்றிட்டத்தை வலுப்படுத்தும் நோக்கில் குறித்த பயிற்சிப் பட்டறை நடைபெற்றது.

இரண்டாம் நாள் செயலமர்வில் போதைப்பொருள் பாவனையை குறைத்தல் மற்றும் பால்நிலை சமத்துவம் தொடர்பான வேலைத்திட்டங்களை யாழ் மாவட்டத்தில் அரச சார்பற்ற நிறுவனங்கள் ஊடாக எவ்வாறு வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்லும் வழிவகைகள் தொடர்பில் ஆராயப்பட்டது. (ம-22.27)

# அரசியல்வாதிகள் அனைவரதும் மோசடிகளை நான் அறிவேன்!

## அநுர மீண்டும் முழக்கம்



**கொழும்பு, செப். 12**

**நான் 24 வருடங்களாக நாடாளுமன்றத்தில் இருக்கிறேன். இந்த அத்தனை அரசியல்வாதிகளின் வண்டவாளங்களையும் நான் அறிவேன். அவர்கள் எப்படி தமக்கும் தமது குடும்பத்துக்கும் வழிசமைத்துக் கொள்கிறார்கள் என்பது தெரியும்.**

ஆனால், நாங்கள் எவருமே தனிப்பட்ட முறையில் எங்களுக்கு ஏதாவது ஈட்டிக்கொள்ளும் நோக்கத்துடன் அரசியலுக்கு வந்த மனிதர்கள் அல்ல. இவ்வாறு தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

'நாடு அநுரவோடு' என்னும் தொனிப்பொருளில் தேசிய மக்கள் சக்தியின் கூட்டம் தம்புத்தேகம நகரில் இடம்பெற்றது.

இதில் அநுர மேலும் தெரிவித்ததாவது:-

நாங்கள் இந்த அரசியலிலிருந்து ஒரு சதத்தைக் கூட ஈட்டிக்கொள்ளாதவர்கள். பொதுப்பணத்தில் ஒரு சதம் கூட விரயம் செய்யாதவர்கள். நீங்கள் ஒரு வீட்டைக் கட்டிக்கொள்ள எவ்வளவோ பிரச்சினைகளை எதிர்நோக்குகிறீர்கள். அவர்கள் ஒரு 'டீல்' மூலமாக கொழும்பில் மிகவும் சொகுசான வீட்டுமனையைக் கொள்வனவு செய்கிறார்கள். ஒரு கொடுக்கல் வாங்கலில் டுபாயில், லண்டனில், அவுஸ்ரேலியாவில் வீடுகளை வாங்குகிறார்கள். அமெரிக்காவில் வீடுகளை வாங்குகிறார்கள். நீங்கள் அவர்களுக்கு அதிகாரத்தை கொடுக்கிறீர்கள். உங்களை அழுத்தத்துக்கு உள்ளாக்குகிறார்கள். அவர்கள் நாட்டின் செல்வத்தை வாரிச்சுருட்டிக் கொள்கிறார்கள். அது தான் இந்த முறைமை.

நாங்கள் சிறுபராயத்தில் இதனை அவ்வளவு ஆழமாக காணவில்லை. ஆனால் இந்த அரசியலை மாற்ற வேண்டுமென எமக்கொரு ஆசை இருந்தது. அத்தகைய அரசியலில் தொடர்ச்சியாக ஈடுபடுகையில் இவர்கள் எவ்வளவு வெட்கமில்லாத மனிதர்கள் என்பதை நாங்கள் கண்டோம்.

நான் 24 வருடங்களாக நாடாளுமன்றத்தில் இருக்கிறேன். இந்த அத்தனை பேருடைய வண்டவாளங்களையும் நான் அறிவேன். மக்களுக்கு குழிதோண்டி அவர்களின் எதிர்காலத்துக்கான பாதையை அமைத்துக் கொள்கிறார்கள். அன்று தபால் ரயிலில் பயணித்த அவர்கள் இன்று மாளிகைகளை அமைத்துக் கொள்கிறார்கள். ஏழு எட்டு வாகனங்களை கொள்வனவு செய்கிறார்கள். நாங்கள் கண்கூடாகவே பார்த்திருக்கிறோம். சாரதியாக தொழில் புரிந்த ஒரு சிலர் அரசியலுக்கு வந்து கலாவெளில், கொழும்பு, நுவரெலியாவில் காணிகளை எவ்வாறு வாங்கினார்கள் என்று எங்களுக்குத் தெரியும். தேயிலை கொழுந்தை ஏற்றித்திரிந்தவர்கள் அரசியலுக்கு வந்து எப்படி தேயிலைத்தோட்ட சொந்தக்காரர்களாக மாறினார்கள் என எங்களுக்குத் தெரியும்.

ரணில் விக்கிரமசிங்க 2015ஆம் ஆண்டு ஜனவரி 8 ஆம் திகதி ஊழல் மோசடியை இல்லாதொழிப்பதாக கூறியே அதிகாரத்துக்கு வந்தார். பெப்ரவரி மாதம் 28 ஆம் திகதி மத்திய வங்கியை கொள்ளையடித்தார்கள். அதிகாரத்தை எடுத்துக்கொண்டது கொள்ளையடிப்பதற்காகத்தான். அதன் பின்னர் என்ன நடந்தது? நாடு சீரழிந்தது.

நாங்கள் மனிதாபிமானம் கொண்டவர்களாயின், எங்களுக்கு மனசாட்சி இருக்குமாயின் இதனை மாற்றியமைப்பதற்காக உயிரை பணயம் வைத்து போராட, அரசியல் இயக்கமொன்றின் பங்காளிகளாக எங்களுக்கு உரிமை கிடையாதா? நான் அவ்வாறு போராடுகின்ற அரசியல் இயக்கமொன்றின் பங்காளி. இந்த நாட்டை செல்வந்த நாடாக மாற்ற எங்களுக்கு உரிமை கிடையாதா?

நீங்கள் எம்மீது நம்பிக்கை வைத்திருக்கிறீர்கள். எம்மீது நேசம் வைத்திருக்கிறீர்கள். எம்முடன் ஈடுபாடு கொண்டிருக்கிறீர்கள். நான் உங்களுக்கு ஒரு உத்தரவாதத்தை தருகிறேன். நீங்கள் எம்மீது வைத்துள்ள நம்பிக்கை கடுகளவேனும் சிதைவடைய நாங்கள் இடமளிக்கமாட்டோம் -என்றார். (ஒ-இ)


# INVITATION FOR BID 2024/06
## Regional Directorate of Health Services Jaffna.

1. The Chairman, Regional Procurement Committee, on behalf of the Regional Director of Health Services, Regional Directorate of Health Services, NP, Jaffna now invites sealed bids from eligible and qualified bidders for the Construction works described in the table below. All the relevant details are described in the same table.
2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure (NCB).
   "Bidding will be conducted through National Competitive Bidding Since the Estimated Value of Work to be performed under this procurement (excluding VAT and other taxes) is below Rs. 50 Mn., regional preference and CIDA grade preference shall apply as stipulated in Public Finance Circular No. 04/2016 (iii).
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in the field of building construction for grade mentioned in the table below.
4. Qualification' requirements are indicated in section 4 of the Bidding document. Additional details are provided in the Schedule (Section 5) for SBD 3 documents.
5. Interested bidders may obtain further information from address given below in 7 and inspect the bidding documents at the same place on any working days from 09.00 hrs to 15.00 hrs.
6. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the Regional Directorate of Health Services, Health village Pannai, Jaffna. (T.P:0212227889, Fax: 0212220822) from 9.00 a.m. to 15.00 p.m. during the period mentioned in the table upon payment of non-refundable fees as mentioned in the table. The method of payment should be by cash.
7. Bids (Original & Duplicate) shall be delivered or sent by registered post to the Chairman, Regional Procurement Committee, Regional Directorate of Health Services, Health village Pannai, Jaffna on or before 10.30 a.m at the date mentioned in the table below. Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.
8. Pre-Bid Conference will be held at Conference Hall, Regional Directorate of Health Services, Health village Pannai, Jaffna on commencing at 2.30 P.M on the date mentioned in the table.
9. Bids shall be accompanied by a Bid security as per the information given in the Table

| CATEGORY II | Document Issuing/Purchasing Period | From 13.09.2024 until 26.09.2024 |
|---|---|---|
| | Pre-Bid Conference | At 2.30 P.M on 19.09.2024 |
| | Closing and Opening of Bids | At 10.30 A.M on 27.09.2024 |

| Bid ID | Description of Work | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period | Grade Required | Non-Refundable Fees | Required Bid Security | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | Security Amount | Validity Period |
| NP/04/41/2024/PSDG/W/01 | Renovation of Maternity ward at Base Hospital Kayts,Jaffna. | 1.86 | 78Days | C9 and C8 (Buildings) | 1,500.00 | 19,000.00 | Till 13.12.2024 |
| NP/04/41/2024/PSDG/W/02 | Fitting of Racks for RDHS New Building | 2.53 | 84Days | C8 and C7 (Buildings) | 1,500.00 | 26,000.00 | Till 27.12.2024 |
| NP/04/41/2024/PSDG/W/03 | Renovation of Staff Quarters at Base Hospital Kayts,Jaffna. | 2.54 | 84Days | C8 and C7 (Buildings) | 3,500.00 | 26,000.00 | Till 27.12.2024 |
| NP/04/41/2024/PSDG/W/04 | Repair of Ward block 02 (Completion of Structural repair work) Phase II at Base Hospital Kayts,Jaffna. | 3.50 | 84Days | C7and C8 (Buildings) | 3,500.00 | 35,000.00 | Till 27.12.2024 |

**Chairman**
**Regional Procurement Committee**
**Regional Directorate of Health Services,**
**Jaffna.**

(CR/43210)J-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அச்சுறுத்தி ரணிலின் வெற்றியை ஒருபோதும் தடுத்துவிட முடியாது

## அநுர தரப்பினருக்கு ஐ.தே.க. சவால்

கொழும்பு, செப். 13

**தேர்தலில் பின்னுக்குத் தள்ளப்படுவதை உணரும்போது தேசிய மக்கள் சக்தி மக்களை அச்சுறுத்தும் நடவடிக்கையை ஆரம்பித்துள்ளது.**

எந்த அச்சுறுத்தலாலும் ஜனாதிபதி ரணிலின் வெற்றியைத் தடுக்க முடியாது என ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஆஸு மாரசிங்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தேர்தல் சூடுபிடித்துள்ள நிலையில் அநுரகுமார திஸாநாயக்க மற்றும் சஜித் பிரேமதாஸ முன்னர் இருந்ததைவிட பின்தள்ளப்பட்டு தோல்வியின் விளிம்புக்கு சென்றுள்ளனர். இவர்கள் தேர்தல் பரப்புரைக் கூட்டங்களில் சேறுபூசும் நடவடிக்கைகளையே செய்கிறார்கள். நாட்டை பொறுப்பேற்று எவ்வாறு முன்னேற்றுவது என்ற திட்டங்கள் எதுவும் இவர்களிடம் இல்லை. நிவாரணம் வழங்கும் திட்டமே இவர்களிடம் இருக்கின்றன. அதனையே அவர்கள் தெரிவித்து வருகின்றனர்.

குறிப்பாக அநுரகுமார தலைமையிலான தேசிய மக்கள் சக்தி செயற்கையான மக்கள் அலை ஒன்றை ஏற்படுத்திக்கொண்டு, ஆட்சியை கைப்பற்றுவதாக மக்களை ஏமாற்றி வருகிறது. இவர்களின் இந்த போலி பரப்புரைகள் தற்போது அம்பலமாகி இருப்பதால், இவர்களுக்கான மக்கள் ஆதரவு குறைந்து வருகிறது.

அதனால் இவர்கள் தற்போது மக்களை அச்சறுத்தும் நடவடிக்கையை ஆரம்பித்துள்ளனர். அநுரகுமார திஸாநாயக்க யாழ்ப்பாணத்துக்கு சென்று மக்களை அச்சுறுத்தும் வகையில் தெரிவித்த கருத்தே மக்கள் விடுதலை முன்னணியின் உண்மையான சுயரூபம். அநுரகுமார திஸாநாயக்கவின் தீவிர ஆதரவாளர்களும் மக்களை அச்சுறுத்தம் காட்சிகள் தற்போது சமூகவலைத்தலங்களில் வைரலாகி வருகின்றன. வெளிநாடுகளில் இருக்கும் இவர்களின் ஆதரவாளர்களே இதனை செய்து வருகின்றனர் - என்றார். (ம)

# ஈரானின் விமானங்கள் பிரிட்டனில் பறக்க தடை

லண்டன், செப். 13

பிரிட்டனின் வான்வெளியில் ஈரானின் விமானங்கள் பறப்பதற்குத் தடை விதிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அதிக பாதிப்புகளை ஏற்படுத்தக்கூடிய ஏவுகணைகளை ரஷ்யாவுக்கு ஈரான் தொடர்ச்சியாக விற்பனை செய்து வருகின்றது. ஈரானிய ஏவுகணைகளால், உக்ரைன் பேரழிவுக்குள் தள்ளப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளதைக் கருத்திற்கொண்டே ஈரானிய விமானங்கள் பிரிட்டனின் வான் பரப்புக்குள் நுழைவதற்கும், பறப்பதற்கும் தடை விதிக்கப்படுவதாக பிரிட்டனால் அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)


# சாவகச்சேரி நகராட்சி மன்றம்

## 2025 ஆம் ஆண்டு குத்தகை கேள்வி அறிவித்தல்

சாவகச்சேரி நகராட்சி மன்ற அதிகார எல்லைக்குட்பட்ட கீழ் குறிப்பிடப்படுகின்ற பொதுச்சந்தை ( மீன்சந்தை, வாகனத்தரிப்பிடம் உள்ளடங்கலாக ) கருவாட்டுக்கடை, மற்றும் இறைச்சிக் கடைகளை 2025 ஆம் ஆண்டு ஜனவரி .மாதம் முதலாம் திகதி தொடக்கம் டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி வரை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

01. குத்தகைக்கான கேள்விப் பத்திரங்களை கீழ்க்குறிப்பிட்ட மீளளிக்கப்படாத படிவக்கட்டணம், மீளளிக்கப்படக்கூடிய வைப்புப்பணம் என்பவற்றை செலுத்தி நகராட்சி மன்ற அலுவலகத்தில் 2024.09.18 ஆம் திகதி தொடக்கம் 2024.10.07 ஆம் திகதி வரையான அலுவலக நாட்களில் மு.ப 9.30 – பி.ப 2.00 மணி வரை பெற்றுக் கொள்ளலாம். கேள்விப்பத்திரங்களை பெறுபவர் தமது தேசிய அடையாள அட்டையுடன் அதன் போட்டோ பிரதியையும் கிராமசேவகரினால் வழங்கப்பட்டு பிரதேச செயலரினால் மேலொப்பமிடப்பட்ட வதிவிடச் சான்றிதழையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

02. கேள்விப் பத்திரம் ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதி :- 08.10.2024 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப 10.00 மணி
கேள்விப் பத்திரம் திறக்கப்படும் திகதி :- 08.10.2024 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப 10.00 மணி

கேள்விப் பத்திரங்கள் இரு பிரதிகளில் பூர்த்தி செய்யப்பட்டுதனித்தனியாக மூலப்பிரதி, இணைப்பிரதி என இரு உறைகளில் வைத்து செயலாளர், நகராட்சி மன்றம்.சாவகச்சேரி என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக குறிப்பிடப்பட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும் அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இடுதல் வேண்டும். 08.10.2024 முற்பகல் 10.00 மணிக்குப் பின்னர் சமர்ப்பிக்கப்படும் கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது

03. எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு பூரண அதிகாரமுண்டு.

04. உள்ளூராட்சி மன்றங்களினால் தவறுநராக பட்டியலிடப்பட்டவர்களுக்கு கேள்விப் படிவம் வழங்கப்படமாட்டாது என்பதுடன் படிவம் வழங்கப்பட்ட பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் கேள்விப்பத்திரம் நிராகரிக்கப்படும்.

05. ஏற்றுக் கொள்ளக்கூடிய குறைந்த கேள்வித் தொகையிலும் குறைவான கேள்வி கோருபவர்களின் கேள்வி வைப்புப்பணம் மீளளிக்கப்படமாட்டாது.

06. கேள்விகள் திறக்கப்படும் அத்தருணம் கேள்விதாரரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.

07. தெரிவு செய்யப்படும் கேள்விதாரர் தாங்கள் தெரிவு செய்யப்பட்டமை தொடர்பாக அறிவிக்கப்பட்ட கடிதத்திகதியிலிருந்து 07 நாட்களுக்குள் கேள்வித் தொகையின் 1/3 பகுதியை செலுத்தி சபையுடன் நிபந்தனைகளை உள்ளடக்கிய ஒப்பந்தம் ஒன்றினை செய்து கொள்ள வேண்டும்.

08. கேள்வி தொடர்பான மேலதிக விபரங்களை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

2025 ஆம் ஆண்டு பொதுச்சந்தை ( மீன்சந்தை, வாகனத்தரிப்பிடம் உள்ளடங்கலாக ) இறைச்சிக்கடைகள் மற்றும் கருவாட்டுக் கடைக்கான குத்தகை அட்டவணை

| இல | குத்தகை விபரம் (01.01.2025– 31.12.2025) | ஆகக்குறைந்த கேள்வித்தொகை (இதரவரிகள் தவிர) | கேள்வி வைப்புப் பணம் (மீளளிக்கக் கூடியது) | கேள்விப்படிவக் கட்டணம் (இதர வரிகள் தவிர) (மீளளிக்க முடியாதது) |
|---|---|---|---|---|
| 01 | சாவகச்சேரி பொதுச் சந்தை (மீன்சந்தை, வாகனத்தரிப்பிடம் உள்ளடங்கலாக ) | 18,734,100.00 | 187,400.00 | 2,000.00 |
| 02 | கருவாட்டுக் கடை இல : 01 | 147,400..00 | 1,500.00 | 2,000.00 |
| 03 | ஆட்டிறைச்சிக் கடை இல : 01 | 501,200.00 | 5,100.00 | 2,000.00 |
| 04 | மாட்டிறைச்சிக் கடை இல : 01 | 1,728,100.00 | 17,500.00 | 2,000.00 |
| 05 | மாட்டிறைச்சிக் கடை இல : 02 | 1,728,100.00 | 17,500.00 | 2,000.00 |
| 06 | கோழி இறைச்சிக் கடை இல : 01 | 1,645,600.00 | 17,000.00 | 2,000.00 |
| 07 | கோழி இறைச்சிக் கடை இல : 02 | 1,645,600.00 | 17,000.00 | 2,000.00 |

➤ குறிப்பு :- இந்நகராட்சி மன்றத்தின் பொதுச் சந்தை, இறைச்சிக்கடை, கருவாட்டுக் கடையிலிருந்து 1/2Km சுற்று வட்டத்திற்குள் தனியார் எவரும் மரக்கறி, இறைச்சி, கருவாடு என்பன விற்பனை செய்ய அனுமதிக்கப்படமாட்டார்கள்.

➤ உற்பத்தியாளர்களினால் சந்தைக்கு கொண்டு வரப்படும் விவசாய உற்பத்திப்பொருட்களுக்கு 10% கழிவு நடைமுறையினை பின்பற்ற முடியாது.

செயலாளர்
நகராட்சி மன்றம்
சாவகச்சேரி
2024.09.13




# இராணுவ ஜெனரல்கள் ஹரிஸுக்கு ஆதரவு

வொஷிங்டன், செப். 13

அமெரிக்க அதிபர் தேர்தலில் கமலா ஹரிஸுக்கு ஆதரவு வழங்கவுள்ளதாக, அமெரிக்காவின் முன்னாள் இராணுவ ஜெனரல்கள் இணைந்து கூட்டாக அறிவித்துள்ளனர்.

ட்ரம்ப் – கமலா ஹரிஸ் இருவருக்கும் இடையிலான நேரடி விவாதம் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிலையில், விவாதங்களை அடிப்படையாக வைத்து பலரும் தங்களின் ஆதரவு யாருக்கு என்று அறிவித்து வருகின்றனர்.


இவ்வாறானதொரு பின்னணியிலேயே, முன்னாள் இராணுவ ஜெனரல்கள் கமலா ஹரிஸுக்குத் தமது ஆதரவைத் தெரிவித்துள்ளனர்.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் கமலா ஹரிஸ், ட்ரம்ப் ஆகிய இருவரில், 'தேசத்தின் நலனுக்கு' முக்கி யத்துவம் வழங்கக்கூடிய தலைமைப் பண்பு கமலா ஹரிஸிடமே உள்ளது. என்றும் இராணுவ ஜெனரல்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சஜித், அநுரவிடம் திட்டங்கள் இல்லை

## ரணில் குற்றச்சாட்டு



கொழும்பு,செப். 13

பொருளாதாரத்தை மீட்கின்ற எந்தத் திட்டங்களும் சஜித்திடமோ அல்லது அநுரவிடமோ இல்லை என்றும், அவர்கள் கவர்ச்சிகரமான மேடைப்பேச்சுக்களில் ஈடுபட்டு வருவதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நாட்டின் அபிவிருத்தியும் அதிகாரப் பகிர்வும் சமகாலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டும். நாட்டின் எதிர்காலம் மக்களின் கையில் தான் உள்ளது. தமக்கு என்ன தேவை என்பதை மக்கள்தான் தீர்மானிக்க வேண்டும் எனவும் ஜனாதிபதி ரணில் மேலும் தெரிவித்துள்ளார். (ம-6)


## வேலையாட்கள் தேவை

1. தொழில்நுட்ப உத்தியோகத்தர் - (TO)
   HND or NCT-CIVIL
2. கணிய அளவையியலாளர் - (QS)
   HND or NCT-QS
3. உதவி கணிய அளவையியலாளர் - (AQS)
4. கணக்காளர் (Accountant)
5. கணக்கு உதவியாளர் (Assistant Accountant)
6. அலுவலக உதவியாளர் (Office Assistant)

சுயவிபரக் கோவையை Whatsapp / Email மூலம் அனுப்பி வைக்கவும்.

0777245399 (WhatsApp)
dreambuild2024@hotmail.com
யாழ்ப்பாணம்.

## வேலையாட்கள் தேவை

| | |
|---|---|
| 1. மேசன் | - Rs. 3000.00 |
| 2. மேசன் உதவியாளர் | - Rs. 2000.00 - 2500.00 |
| 3. பெயின்ரர் | - Rs. 2500.00 |
| 4. பெயின்ரர் உதவியாளர் | - Rs. 2000.00 |
| 5. வெல்டர் உதவியாளர் | - Rs. 2000.00 |
| 6. வயரிங் | - Rs. 2500.00 - 3000.00 |
| 7. பிளமிங் | - Rs. 2500.00 - 3000.00 |

8. தச்சு வேலை (அனுபவம் உள்ளவர்கள்)- Rs. 2500.00-3000.00
தினசரி சம்பளம் வழங்கப்படும்
(தேவைப்படின் தங்குமிடம், உணவு ஒழுங்கு செய்து தரப்படும்)
தொடர்பு -0777 245 399 (காலை 8.30 - மாலை 5.00 வரை)
யாழ்ப்பாணம்.


## துயர் பகிர்கின்றோம்

வலிகாமம் வடக்கு பிரதேசசபை மயிலிட்டி உப அலுவலக ஊழியர் நலன்புரி சங்க அங்கத்தவரான திரு **முருகையா ஜெயரட்ணம்**
அவர்களின் அன்புத் தாயார்
**முருகையா செம்மனச்செல்வி**
கடந்த 27.08.2024 செவ்வாய்க்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.
அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**ஊழியர் நலன்புரி சங்கம்,**
**வலிகாமம் வடக்கு பிரதேச சபை, மயிலிட்டி உப அலுவலகம்.**


## வேலை வாய்ப்பு

யாழ். நகரில் அமைந்துள்ள ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ் மற்றும் சமுத்திரா ரேட்ரஸ் (Hardwere) நிறுவனங்களுக்கான வேலை வாய்ப்பு. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

தொ.இல. 077 077 6469


## ஆதன உரிமை பெயர்மாற்ற அறிவித்தல்

வலிகாமம் வடக்கு பிரதேசசபை :- மல்லாகம் உப அலுவலகம்
உரிமையாளர் பெயர் :- திரு. சின்னத்துரை வாமதேவன்
விண்ணப்பதாரர் பெயர் :- திரு. சின்னத்துரை வாமதேவன்
முகவரி :- 676, காங்கேசன்துறை வீதி, இணுவில்

வலிகாமம் வடக்கு பிரதேசசபையின் மல்லாகம் உப அலுவலகத்திற்கு உட்பட்ட வட்டாரம் 20, கோணப்புலம் வீதி ஆதன இலக்கங்கள் 25, 29 இல் அமைந்துள்ள மல்லாகம் கோவிற்பற்று மல்லாகம் இறை "சல்லி ஓடை" என்ற ஆதனம் உரிமைகோருபவர் சொந்தக்காரர் என்ற பெயரில் எமது சோலைவரி ஆதனப் பதிவேட்டில் பதியப்பட்டு காணப்படுகின்றது.

"சல்லியோடை" என்ற நிலப்பரப்பு 06 குளி 0.10 விஸ்தீரணமுள்ள ஆதனம் பிரசித்த நொத்தாரிசு ச. க. கணேசவேல் முகதாவில் 2301 ஆம் இலக்கத்தில் 2023.07.12 ஆம் திகதியில் நிறைவேறிய நன்கொடை உறுதி மூலம் விண்ணப்பதாரரான சின்னத்துரை வாமதேவன் என்பவரை வந்தடைந்துள்ளது. 2301 ஆம் இலக்க உறுதி யாழ்ப்பாண காணிப்பதிவகத்தில் G193/23 இலக்க காணிப் பதிவுப் புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள காணிப்பதிவுப் புத்தகப் பிரதி இவ் விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மேற்குறித்த 2301ஆம் இலக்க உறுதியில் அதற்கான தாயுறுதியாக சி. த. ராஜரட்ணம் முகதாவில் 03.12.1942 ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட 1099 ஆம் உறுதி மூலம் விண்ணப்பதாரியின் தாயாருக்கு சீதன உறுதி மூலம் அரைவாசி சொரியலாக கிடைக்கப்பெற்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது. குறித்த உறுதியின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதி இணைக்கப்பட்டுள்ளது மேலும் 1099 ஆம் உறுதிக்கமைவாக தாயாருக்கு வந்தடைந்த ஆதனத்தை 2301 ஆம் இலக்க நன்கொடை உறுதி மூலம் நன்கொடை கொடுநரின் பங்கும் பெறுநரின் பங்கும் சேர்த்து நன்கொடை பெறுநராகிய சின்னத்துரை வாமதேவன் என்பவருக்கு குறித்த நிலப்பரப்பு 6 குளி 01.0 ஆதனம் வந்தடைந்துள்ளது. குறித்த இவ்விண்ணப்பத்தில் விண்ணப்பகாரரின் சத்தியக்கூற்றில் தனது தாயாருக்கு 07 பிள்ளைகள் எனக்குறிப்பிடப்பட்டுள்ளதுடன் பெண் பிள்ளைகளுக்கு ஏற்கனவே சீதன ஆதனங்கள் வழங்கப்பட்டதாகவும் ஆண்வாரிசுகள் இருவர் மரணமடைந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் மரணமடைந்தவர்களின் பிள்ளைகள் தொடர்பில் அதாவது பின்னுரித்தாளர்கள் தொடர்பில் எவ்வித குறிப்பீடும் காணப்படவில்லை. மேலும் குறித்த ஆதனத்தில் சிறிய தகடிட்ட நாகதம்பிரான் கோவிலும் காணப்படுகின்றது.

### ஆதன விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாணப் பகுதி வலிவடக்குப் பகுதி, மல்லாகம் கோவிற்பற்று வலிவடக்கு பிரதேச செயலர் பிரிவு, வலிவடக்கு பிரதேசசபை, கிராம அலுவலர் பிரிவு J/216 "சல்லி ஓடை" நிலப்பரப்பு 11 பதினொன்று, சொரியலான இவ்வாதனத்தை ஆண்டனுபவித்து வருவது எங்களுக்கும் மறுபங்காளருக்கும் சிரமமாக இருந்தமையால் மறுபங்காளரான உமாதேவி சந்திரகுமார் உரிம நில அளவையாளர் வி. மகேந்திரனின் 2004.08.23ம் திகதி 415ம் இலக்க வரைபடத்தில் சுட்டியவாறு முழு ஆதனத்தினது தெற்குப்பக்க நில. பர. 5 1/2 யை (ஐந்தரை) எடுத்துக் கொண்டார்கள். மிகுதித் துண்டை நாங்கள் அதே உரிம நிலஅளவையாளர் வி. மகேந்திரனின் 434ம் இலக்க படத்தின்படி வடக்குப் பக்கமாக பெற்றுக் கொண்டோம். இதன் விசாலம் அளவின் படி நில. பர. 6 ஆறு குளி 0.05 தசம் சைபர் சைபர் ஐந்து. இதில் அரைவாசிப் பாகத்தை நில. பர. 3 மூன்று குளி .005 நான் எனது அண்ணர் சின்னத்துரை வாமதேவனுக்கு நன்கொடை கொடுக்கிறேன். அவர் தனது அரைவாசி பங்கை இத்துடன் சேர்த்து ஆண்டனுபவிப்பாராக. குறித்த 434ம் இலக்க படத்தின் படி இதன் எல்லைகள். தற்போது நிலப்பரப்பு 3 குளி 005 ஐ நன்கொடை ஏற்கனவே உள்ள இதே விசால ஆதனத்துடன் மொத்த விசாலம் நிலப்பரப்பு 6 குளி .010 சைபர் ஒன்று சைபர் இதற்கு எல்லைகள்

கிழக்கு :- ஒழுங்கை
வடக்கு :- இலங்கையர் சுப்பிரமணியத்தின் ஆதனமும் கிணறும், தூர்வையும்
மேற்கு :- சோமசுந்தரம் சிவபாதத்தின் ஆதனம்
தெற்கு :- உமாதேவி சந்திரகுமாரின் ஆதனம் மேலும் வடக்கெல்லைக் காணியில் இதற்குரிய பங்கும் இவ்வாதனத்தின் தென்கிழக்கு எல்லையில் இருக்கும் கிணற்றில் தெற்கெல்லைக்காரருக்கு உரிய பங்கும் வழிவாய்க் காலுரித்தும் உட்பட இதற்குரிய, பங்கும் இதனடங்கலும்

மேற்குறித்த ஆதனத்தை சின்னத்துரை வாமதேவன் என்னும் பெயரில் ஆதன பெயர்மாற்றம் செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்த முப்பது (30) நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ வெளிநாட்டில் வசிப்பவர்களாக இருந்தால் இங்குள்ள உறவினர்கள் ஊடாகவோ ஆட்சேபனையைத் தெரிவிக்குமாறும் யாரும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் சின்னத்துரை வாமதேவன் பெயருக்கு ஆதன உரிமைமாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் இந்த ஆதனஉரிமைமாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் வடக்கு பிரதேசசபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

திரு. சுந்தரேஸ்வரன் சுதர்ஜன்
செயலாளர்
வலிகாமம் வடக்கு பிரதேசசபை
காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி)

(CS/561944-1)

## துயர் பகிர்கின்றோம்

வலிகாமம் வடக்கு பிரதேசசபையின் ஊழியர் நலன்புரி சங்க அங்கத்தவரான திரு **முருகையா ஜெயரட்ணம்**
அவர்களின் அன்புத் தாயார்
**முருகையா செம்மனச்செல்வி**
கடந்த 27.08.2024 செவ்வாய்க்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.
அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**ஊழியர் நலன்புரி சங்கம்,**
**வலிகாமம் வடக்கு பிரதேச சபை.**

## 3ஆம் ஆண்டு நினைவலைகள்

அன்னை மடியில்
01 . 03 . 1999



ஆண்டவன் அடியில்
13 . 09 . 2021

### அமரர் ஸ்ரீவாணன் டினோசிகா



துள்ளித்திரிந்த பெண்மான் துவண்டுபோனது
காரிருள்மேகம் சூழ்ந்ததால் அதுகருகிப் போனது
இருபத்துமூன்று ஆண்டுகள்
நீ வளர்பிறையாய் வளர்ந்துவந்தாய்
மிளிர்ந்துவந்த நீ கண் இமைக்கும் நேரத்தில்
மின்னலாய் மறைந்து போனாய்
நீ அஸ்தமனமாகி 03 ஆண்டுகள்
சென்றுவிட்டன
வானத்தை நோக்கிப் பார்க்கின்றோம்
வளர்பிறையாக வந்த
உன்னைக் காணவில்லை.
அமாவாசை நாளாகவே இருக்கின்றது.
என்றோ ஒரு நாள்
நீ மீண்டும் வளர்பிறையாக
வருவாய் என எண்ணி வானத்தையே
பார்த்ததுகொண்டிருக்கின்றோம்.
நீ வருவாய் என........



உங்கள் ஆத்மா சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

சங்குவேலி, மானிப்பாய். குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நா. பணியாளர்கள் இஸ்ரேலால் படுகொலை!

காஸாவில் உள்ள பாடசாலையொன்றில் இஸ்ரேல் மேற்கொண்ட விமானத் தாக்குதலில் ஐக்கிய நாடுகள் சபையின் பணியாளர்கள் ஆறு பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

காஸாவில் பொதுமக்களின் முகாம்கள் மீதும், வாழ்விடங்கள் மீதும், பாடசாலைகள் மீதும் இஸ்ரேல் அண்மைக்கால மாதத் தொடர்ச்சியாக வான் தாக்குதல்களை நடத்திவந்தது. தற்போது பாடசாலையொன்றில் நடத்தப்பட்ட தாக்குதலில் ஐக்கிய நாடுகள் சபையின் பணியாளர்கள் உட்பட 14 பேர் கொல்லப்பட்டுள்ளமை இஸ்ரேலுக்கு எதிரான சர்வதேச எதிர்ப்புகளைத் தீவிரப்படுத்தியுள்ளது.

இஸ்ரேல் நடத்திய வான் தாக்குதலில், ஐக்கிய நாடுகள் சபையின் புகலிட முகாமையாளர் உட்பட ஆறு பணியாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர். இது கொஞ்சம் கூட ஏற்கவோ அல்லது சகித்துக்கொள்ளவோ முடியாத விடயம் என்று ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலர் அன்ரோனியோ குட்டரஸ் தனது அதிருப்தியையும் கண்டனத்தையும் வெளியிட்டுள்ளார்.

காஸாவில் இஸ்ரேலின் இராணுவ நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்ட பின்னர், ஐக்கிய நாடுகள் சபையின் பணியாளர்கள் ஒரே தடவையில் கொல்லப்படுவது இதுவே முதல் தடவை என்றும் குட்டேரஸ் மேலும் தெரிவித்துள்ளார். (ம)

## பொலிஸ்...

வீட்டு உரிமை தொடர்பாக இரு தரப்பினரிடையே நீண்டகாலமாக ஏற்பட்ட தகராறு தொடர்பாகப் பொலிஸாரிடம் ஒரு தரப்பால் முறைப்பாடு செய்யப்பட்ட நிலையில், மற்றொரு தரப்பை நெல்லியடிப் பொலிஸ் பொறுப்பதிகாரி அச்சுறுத்தியதுடன், அவரது வீட்டு உடைமைகளை தூக்கி எறிந்தாகப் பாதிக்கப்பட்டவர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

பொலிஸாரின் அச்சுறுத்தல் தொடர்பாகப் பாதிக்கப்பட்டவர் காங்கேசன்துறை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்துக்குச் சென்று முறையிட்டுவிட்டு வீட்டுக்குத் திரும்பியபோது இனந்தெரியாத நபர்களால் வாள்வெட்டுக்கு இலக்காகியுள்ளார். காயமடைந்தவர் அம்புலன்ஸ் மூலம் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில், மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (அ-ம-26)

## ஸ்ரீலங்காவுக்கு...

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 57ஆவது கூட்டத்தொடர் கடந்த திங்கட்கிழமை ஜெனிவாவில் ஆரம்பமானது. அன்றையதினம் உலகளாவிய மனித உரிமைகள் நிலவரம் தொடர்பான ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டர்க்கின் உரை மற்றும் மியன்மார் மனித உரிமைகள் நிலவரம் தொடர்பான எழுத்துமூல அறிக்கை, அதன்மீதான விவாதம் என்பவற்றைத் தொடர்ந்து இலங்கை விவகாரம் குறித்து ஆராயப்பட்டது.

அதன்படி இலங்கை தொடர்பில் மனித உரிமைகள் பேரவையில் ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட 'இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்தல்' என்ற தலைப்பிலான 51/1 தீர்மானத்தின் உள்ளடக்க அமுலாக்கத்தில் அடையப்பட்டுள்ள முன்னேற்றம் மற்றும் நாட்டின் தற்போதைய மனித உரிமைகள் நிலவரம் என்பன தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டர்க் உரையாற்றினார்.

அதனைத்தொடர்ந்து உயர்ஸ்தானிகரின் அறிக்கை தொடர்பில் உறுப்புநாடுகளின் பிரதிநிதிகள் உரையாற்றியதுடன், சர்வதேச மற்றும் உள்நாட்டு மனித உரிமைகள் மற்றும் சிவில் சமூக அமைப்புகள் அவற்றின் அறிக்கைகளைச் சமர்ப்பித்தன. இவ்வாறு சமர்ப்பிக்கப்பட்ட சிவில் சமூக அமைப்புகளின் அறிக்கைகளில் இலங்கை தொடர்பில் ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட 51/1 தீர்மானத்தை மேலும் இரு வருடங்களுக்கு நடைமுறைப்படுத்தக்கூடிய வகையில் புதுப்பிக்குமாறு பேரவையிடம் வலியுறுத்தப்பட்டிருந்தது.

இலங்கை தொடர்பில் நிறைவேற்றப்பட்ட 46/1 தீர்மானம், பின்னர் 51/1 ஆக காலநீடிப்புச்செய்யப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வந்த நிலையில், அந்தத் தீர்மானம் இந்த மாதத்துடன் முடிவுக்கு வருகிறது. அதனையடுத்து இலங்கை தொடர்பில் புதிய தீர்மானமொன்றைக் கொண்டுவருவது பற்றி முன்னர் ஆராயப்பட்டபோதிலும், இலங்கையில் இது தேர்தல் ஆண்டு என்பதால் ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை மேலும் ஒன்று அல்லது இரண்டு வருடங்களுக்கு காலநீடிப்புச் செய்வதற்கான சாத்தியப்பாடு குறித்து பிரிட்டன் தலைமையிலான இணையனுசரணை நாடுகளால் ஆலோசிக்கப்பட்டது.

இவ்வாறானதொரு பின்னணியில் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 9ஆம் திகதியுடன் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 57ஆவது கூட்டத்தொடர் முடிவடையவுள்ள நிலையில், ஒக்ரோபர் மாதம் 7ஆம் திகதி இலங்கை தொடர்பான 51/1 தீர்மானம் அரசாங்கத்தின் இணக்கப்பாட்டுடன் பேரவையில் வாக்கெடுப்பின்றி காலநீடிப்புச் செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இருப்பினும் எதிர்வரும் 21ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் ஆட்சிபீடமேறும் புதிய அரசாங்கம் இதற்கு உடன்படாவிடின், இலங்கை தொடர்பான தீர்மானத்தைக் காலநீடிப்புச் செய்வதற்கு வாக்கெடுப்புக்குச் செல்லவேண்டிய கட்டாயம் ஏற்படும் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம)

## தமிழர்களுக்குத்...

"இதுவரை எட்டு நிறைவேற்று அதிகார ஜனாதிபதிகள் இருந்துள்ளனர். ஆனால், இவர்களில் எவரும் நிறைவேற்று அதிகார முறையை இல்லாமல் செய்யவில்லை. எவரும் 13ஆவது திருத்தத்தை முற்றாக நடைமுறைப்படுத்தவில்லை. ஆனால், இவர்களில் பலர் மக்களிடம் குறிப்பாக தமிழ் மக்களிடம் பொய்யான வாக்குறுதியைத் தமிழர்களிடம் கூறியவர்கள்தான். ஆனால், நான் பொய்யான வாக்குறுதியை வழங்க விரும்ப வில்லை. முடியாது என்ற விடயத்தை முடியாது என்று கூறுகின்றேன். தமிழர்களுக்கு 13 ஆவது திருத்தத்தைத் தருவதாகத் தெரிவித்த எவரும் தேர்தலைக்கூட நடத்தவில்லை. ஆனால், நான் தேர்தலை நடத்துவேன். தமிழர்களுக்கு அபிவிருத்தியைத் தருவேன். தமிழர்களின் கலாசாரத்தைப் பாதுகாப்பேன். மாறாக 13ஆவது திருத்தத்தை முற்றாகத் தருவதற்கு என்னால் முடியாது" - என்றார். (அ-ம-சி-26)

## போர்க்...

இலங்கையில் போர்க்குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளவர்களுக்கு எதிராக பிரித்தானியா தடைகள் விதிக்கப்படுமா? என்று பிரிட்டன் நாடாளுமன்ற உறுப்பினர் உமா குமாரன் கேள்வி எழுப்பியிருந்தார்.

அந்தக் கேள்விக்குப் பதில் வழங்கிய போதே, 'இதற்குத் தீர்க்கமான பதிலைத் தெரிவிப்பது எதிர்கால நடவடிக்கைகளைப் பாதிக்கும்' என்றவாறாக பிரிட்டனின் வெளிவிவகார அமைச்சர் கேத்ரின் வெஸ்ட் சுட்டிக்காட்டியுள்ளார்.

எதிர்காலத்தடைகள் குறித்த ஊகங்களை வெளியிடுவது பொருத்தமற்ற விடயம். ஏனென்றால் தடைகளால் ஏற்படக்கூடிய தாக்கத்தை அது குறைக்கலாம். அத்துடன் பொருளாதாரத் தடைகள் எனப்படுபவை முன்னெச்சரிக்கைகளும் முன்னறிவிப்பும் வழங்கி முன்னெடுக்கும் விடயமல்ல என்றும் அமைச்சர் கேத்ரின் வெஸ்ட் மேலும் தெரிவித்துள்ளார். (அ-ம)

## தமிழ்...

என்று குரலற்றவர்களின் குரல் அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

இது தொடர்பில் அந்த அமைப்பு வெளியிட்ட செய்தியறிக்கையில் உள்ளதாவது:-

"கைதிகள் தின நிகழ்வை சிறைத்துறை மேற்கொண்டு வருகின்றது. உணவு, நீர், சுகாதாரம் மற்றும் மருத்துவம் போன்ற அடிப்படைக் கட்டமைப்புகள் இல்லாமல் கைதிகள் வாழ்ந்துவரும் நிலையில், வெறும் பெயருக்காகவா கைதிகள் தினம் கடைப்பிடிக்கப்படுகின்றது? என்ற கேள்வி எழுகின்றது.

மோசமான கட்டமைப்பைக் கொண்டியங்கும் சிறைக்குள்ளே, தமிழ்ச் சமூகத்தை நேசித்த எமது தமிழ் அரசியல் கைதிகள் 30 ஆண்டுகளாக வாடிக்கொண்டிருக்கிறார்கள். இன்று, தேர்தல் பரப்புரைகளாலும் எண்ணற்ற வாக்குறுதிகளாலும், நாடு நிரம்பித் ததும்பிக் கொண்டிருக்கிறது. ஆனபோதிலும், தமிழினத்தின் பெயரில் மூன்று தசாப்த காலங்களாகச் சிறையில் கொடுமை அனுபவித்து வரும் எமது தமிழ் அரசியல் கைதிகளின் நரக வாழ்க்கைக்கான முற்றுப்புள்ளியின் எல்லை இதுவரை தெரியவில்லை.

எனவே நாளுக்கு நாள் வஞ்சிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளினதும் விடுதலை விடயத்தில், அரசின் உண்மையான இறுதிநிலைப்பாட்டை பொதுவெளியில் தெரிவிக்கவேண்டும்" - என்றுள்ளது. (அ-ச-26-20)

## காணிவாங்க...

யாழ்ப்பாணம் - தெல்லிப்பழையில் தங்கியிருந்த அந்த நபர், காணி வாங்குவதற்காக கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த தரகர் ஒருவருடன் தொடர்பைப் பேணியுள்ளார். அவருக்கு விடயங்கள் அனைத்தையும் தெரியப்படுத்திய பின்னர் காணி வாங்குவதற்காக வைத்திருந்த 85 இலட்சம் ரூபா பணமே திருடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் தெல்லிப்பழை பொலிஸாரிடம் முறையிடப்பட்டுள்ள நிலையில், பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். யாழ்ப்பாணத்தில் அண்மைக்காலமாக புலம்பெயர் உறவுகளை இலக்குவைத்து மோசடிகள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-27-26)

## வாக்களிப்பது...

பெறுவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் எவ்வாறு வாக்களிப்பது? என்பது தொடர்பில் மக்கள் மத்தியில் சரியான தெளிவின்மை காணப்படும் நிலையில், மக்களைத் தெளிவுபடுத்தும் வகையில் முன்னெடுக்க வேண்டிய செயற்றிட்டங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது. (அ-ம-66-26)

## மகள்...

பாட்டுக்கு அமைய சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், யுவதி மருத்துவப் பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (அ-ம-27-26)

## ஜனாதிபதி...

சந்திப்பில் கலந்துகொள்கிறார். நாளை மாலை 3.30 மணியளவில் கொக்குவில் தேசிய கலை இலக்கியப் பேரவையின் முருகையன் கேட்போர் கூடத்தில் சமூக அக்கறையாளர்கள், புத்திஜீவிகள், அரசியல் ஆர்வலர்கள் கலந்து கொள்ளும் ஒன்றுகூடலில் அவர் உரையாற்றவுள்ளார்.

அன்றையதினம் மாலை 6 மணியளவில் புத்தூர் கலைமதி கரப்பந்தாட்ட மைதானத்தில் இடம்பெறும் பகிரங்கப் பொதுக் கூட்டத்தில் நுவன் போபகே கலந்து கொண்டு உரையாற்றுவார். (அ-ம-66)

## ஜயவர்த்தன...

மாணவர்கள் அனைவரும் நேற்று மாலை 6 மணியுடன் பல்கலைக்கழக வளாகத்தில் இருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர். (அ-ம)

## சஜித்துக்கு...

வவுனியாவில் கூடிய தமிழரசுக் கட்சியின் குழு, சஜித் பிரேமதாஸவை ஆதரிப்பது என்ற முடிவைத் தாமதமின்றி நடைமுறைப்படுத்துவது என்றும் தமிழர் அரசியல் அபிலாஷைகளை நிறைவேற்றுவதாகத் தந்த வாக்குறுதியைத் தாமதமின்றி நடைமுறைப்படுத்த வேண்டும் என சஜித்திடம் வலியுறுத்துவது என்றும் தீர்மானித்துள்ளது. (அ-ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணுவாயுத மோதலில் ஈடுபடுவதற்குத் தயார்

## அமெரிக்காவுக்கு வடகொரியா எச்சரிக்கை



**பியாங்யாங், செப். 13**

**அமெரிக்காவுடன் அணுவாயுத மோதலில் ஈடுபடுவதற்குத் தயார் என்றும், அந்த வலிமை வடகொரியாவிடம் உள்ளதாகவும் அதிபர் கிம் ஜோங் உன் தெரிவித்துள்ளார்.**

வடகொரியாவின் 76ஆவது ஆண்டுவிழா, வடகொரியத் தலைநகர் பியாங்யாங்கில் இராணுவ அணிவகுப்புகளுக்கு மத்தியிலும், வடகொரியாவின் இராணுவப் பலத்தை வெளிப்படுத்தும் விதமாகவும் நேற்றுக் கடைப்பிடிக்கப்பட்டது.

இதன்போதே, அமெரிக்காவின் அனைத்து விதமாக அச்சுறுத்தல்களை எதிர்கொள்ள வடகொரியா அணுவாயுதப் போரில் ஈடுபடத் தயாராகவே இருப்பதாகவும் அதிபர் கிம் ஜோங் உன் தெரிவித்துள்ளார். (ம)

# இலங்கையில் தேர்தல் கண்காணிப்பாளர்கள்

கொழும்பு, செப். 13

சுயாதீன தேர்தல்களுக்கான ஆசிய வலையமைப்பு கண்காணிப்பாளர்கள் கடந்த புதன்கிழமை இலங்கைக்கு வந்துள்ளனர். ஏற்கனவே ஐரோப்பிய ஒன்றிய கண்காணிப்பாளர்களும், அணிசேரா நாடுகளின் கண்காணிப்பாளர்களும் இலங்கையில் முகாமிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-6)


## விற்பனைக்கு

யாழ். திருநெல்வேலி பரமேஸ்வரா சந்திக்கு அருகாமையில் பலாலி வீதியில் 86 அடியினை முகப்பாகவும் கிழக்கு மேற்காக 152 அடி அகலத்துடன் 47 பேர்ச் காணியில் அமைந்த வியாபாரக் கட்டடம் விற்பனைக்கு உண்டு. இணைந்த குளியலறைகள் 18 மற்றும் பல மண்டபங்கள் கொண்ட கட்டடம்.
விருந்தினர் விடுதி மற்றும் உணவகமாக உபயோகிக்க உகந்தது.
(தரகர் தேவையில்லை)

**தொலைபேசி இல. 077 953 0496**

## New City கோழி Farm

34 வருட பூர்த்தியை முன்னிட்டு கொழும்பு விலையில் யாழ்ப்பாணத்தில் கோழிகள், முட்டைகள் மலிவாகப் பெற்றுக்கொள்ளலாம்.

- **24 மணிநேர சேவை**
- **புரோயிலர் இறைச்சி**
  **(சில்லறை - 1000/- 10KG க்கு மேல் - 950/-)**
- **உயிருடன் புரோயிலர் 1 Kg - 620/-**
- **உயிருடன் தேவைப்படுபவர்கள் முதல் நாள் (காலை 10 மணிக்கு முன்பு) பதிவு செய்யவும்.**

**New Citity கோழி பார்ம்**
**சின்னக்கடை மார்க்கட் முன்பாக, குருநகர், யாழ்ப்பாணம்.**
**Call: 077 385 6224**

(CS/56186) J-1

## வேலைவாய்ப்பு

யாழ்ப்பாணத்தில் இயங்கும் முன்னணி Hotel ஆன Tilko City Hotel ற்கு பின்வரும் பணியாளர்கள் தேவைப்படுகின்றார்கள்.

1. உணவக பணியாளர் - Restaurant Waiter
2. மதுசாலை உதவியாளர் - Bar Waiter
3. விருந்தினர் விடுதி பராமரிப்பாளர் - Housekeeper
4. சமையலாளர் - Cook

அனுபவம் மற்றும் வயதிற்கு ஏற்ப சம்பளம் தீர்மானிக்கப்படும்.
உணவு மற்றும் தங்குமிட வசதிகள் செய்து தரப்படும்.
தங்களது சுயவிபரக் கோவையை 18.09.2024 ற்கு முன்னர் நேரில் அல்லது கீழ்காணும் முகவரிக்கு/ மின்னஞ்சலிற்கு அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப் படுகின்றீர்கள்.
தொடர்புகளுக்கு -021 720 0707/077 343 8373 / 077 769 6443 / 077 470 5759

info@tilkohotels.com
Tilko Jaffna City Hotel
70/6, K.K.S Road, Jaffna.


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும்



தோற்றம்
16.02.1975

மறைவு
12.08.2024

இணுவில் கிழக்கு கொக்கன் வளவைப் பிறப்பிடமாகவும் கனடா மற்றும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட

**சுவாமிநாதபிள்ளை ஐங்கரன்**

அவர்களின் 31ஆம் நாள் நிகழ்வுகள் இன்று (13.09.2024) வெள்ளிக்கிழமை கொழும்பில் உள்ள அவரது இல்லத்தில் முற்பகல் 10.00 மணியளவில் நடைபெறும்.

St. Lowrence Road,
Colombo. வெள்ளவத்தை.

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

தோற்றம்
04 . 08 . 1956



மறைவு
12 . 09 . 2024

**அமலோற்பவரதி மரியதாஸ்**

**(ஓய்வு பெற்ற எழுதுநர் - யாழ் பல நோக்கு கூட்டுறவுச் சங்கம்)**

யாழ்ப்பாணம் மத்தியூஸ் வீதியைப் பிறப்பிடமாகவும், பழைய தபாற் கந்தோரடி இருபாலையை வசிப்பிடமாகவும் கொண்ட அமலோற்பவரதி மரியதாஸ் (ரதி) நேற்று (12.09.2024) வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வெலிச்சோர் (மின்சார சபை ஊழியர்) - மரியம்மா தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான யோசேவ் - ஞானம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், மரியதாஸ் (ஓய்வு பெற்ற சாரதி கரித்தாஸ் - கியூடெக்) அவர்களின் பாசமிகு மனைவியும், அஞ்சலா (தவமணி) அவர்களின் அன்புச் சகோதரியும், கென்ஸ்மன் றோய் (குடிவரவு, குடியகல்வு அதிகாரி), டிலானி (ஆசிரியர் - பம்பலப்பிட்டி திருக்குடும்ப கன்னியர் மடம்), நிர்மலி சுஜானி (warehouse officer) ஆகியோரின் பாசமிகு தாயாரும், கொலன்சியா (Director - The shahe (PVT)Ltd, உமாப்பிரியன் (செயற்பாட்டு முகாமையாளர், HNB PLC - Mutwal), சுரேகானந்த் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், தியாஹெமான்சி, ஜீஷா ஹெமானிக்கா, ரற்றியானா, ஈதன் கென்ஸ்மன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதி நல்லடக்க திருப்பலி இன்று (13.09.2024) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணி அளவில் கோப்பாய் புனித மரியன்னை ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் மரியன்னை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பழைய தபாற்கந்தோர் அருகாமை,
இருபாலை.

**தகவல் :**
**குடும்பத்தினர்**
**077 228 8218**

(CS/56189) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111
விளம்பரம்:advt@uthayan.com
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 13.09.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.